Registered as a News Paper in Sri Lanka

# தினக்கதிர்

தினசரி

THINAKKATHIR DAILY

வர்ணம், கறுப்பு - வெள்ளை படப்பிடிப்புகளுக்கு மற்றும் பிரேமிங், மேலதிக படப்பிரதிகளை எடுப்பதற்கும் ஒரே இடம்

லக்ஷ்மி ஸ்ருடியோ

லக்ஷ்மி ஸ்ருடியோ
பிரதான வீதி, களுவாஞ்சிக்குடி

ஒளி - 01 - கதிர் - 309 01.03.2001 வியாழக்கிழமை பக்கங்கள் - 08 விலை ரூபா 5/

# பிரித்தானியா தடை விதித்தாலும் சமாதான முயற்சியைத் தொடருவோம்.

## அன்ரன் பாலசிங்கம்

(லண்டன்)



பிரித்தானிய அரசு நமது விடுதலை இயக்கம் மீது தடை விதித்த போதும் சமாதான முயற்சியை விடாது தொடருவோம் நோர்வே அரசுக்கு நம்மாலான ஒத்துழைப்புகள் அனைத்தையும் வழங்குவோம். பிரித்தானியா அரசு (எந்த வகையில்) வன்முறையிலா அல்லது கடும் போக்கிலா இப்பயங்கரவாதச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது என்பதில்தான் சமாதான முயற்சியின் எதிர்காலம் தங்கியுள்ளது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான திரு.அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது:-

பயங்கரவாத அமைப்புக்கள் என்ற பட்டியலில் பிரித்தானிய அரசு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் சேர்த்திருப்பது தமிழ் மக்களுக்கு ஆழ்ந்த கவலையையும், ஏமாற்றத்தையும் கொடுக்கும் அத்தோடு நோர்வே அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிக்கும் இது ஒரு பெரிய பாதிப்பையே இழைக்கும்.

பிரித்தினியா உட்துறை அமைச்சு நேற்று மாலை பாராளு மன்றத்தில் வெளியிட்ட பயங்கரவாத அமைப்புக்களின் பெயர்ப்பட்டியலில் விடுதலைப்புலிகளையும் இணைத்திருப்பது குறித்து கருத்துத் தெரிவித்த திரு.பாலசிங்கம் 25 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக போராடிவரும் உண்மையான மக்கள் இயக்கமான நமது விடுதலை அமைப்புக்கு பிரித்தானிய அரசினால் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டிருப்பது நமக்கு வேதனையைத் தருகிறது எனக் கூறினார்.

(8ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டன் தடைப்பட்டியலில் புலிகள் அமைப்பும் இணைப்பு!

## விவாதத்தின் பின்பே அங்கீகாரம்

(நமது சிறப்பு நிருபர்)

**தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் பிரித்தானியாவின் பயங்கர வாதத்தின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

நேற்று மாலை பிரித்தானிய பாராளுமன்றத்தில் உள்துறை அமைச்சு வெளியிட்ட பட்டியலில் விடுதலைப்புலிகள் அமைப்பு இணைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

எனினும் பிரிட்டிஷ் அரசின் இரு பாராளுமன்ற சபைகளிலும் இப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் கிடைக்கப்பட்ட பின்பே இந்த அமைப்புக்களை தடை செய்ய முடியும்.

கடந்த வாரம் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் பயங்கரவாத தடைச் சட்டம் அமுலுக்கு வந்தபோது பிரிட்டிஷ் உள்துறை அமைப்பு தடை செய்யப்படும் அமைப்புக் களின் பட்டியலை வெளியிடவில்லை. தற்போது தயாரிக்கப்பட்ட பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பு இந்திய தீவிரவாத அமைப்புகள் குர்தீஸ் தீவிரவாத அமைப்புகள் அடங்குகின்றன.

மேற்படி பட்டியல் தயாரிக்கப்பட்ட போது தடைக்கான

(8ம் பக்கம் பார்க்க)

### பிரித்தானியாவின் தடைப்பட்டியல்

பிரித்தானியா அரசின் நாட்டில் காணப்படும் 21 அமைப்புகளை பயங்கரவாத இயக்கங்களாக தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி தடைசெய்யப் பட்ட அமைப்புக்களின் விபரம் வருமாறு.

1. அல்குவா 'இடா.
2. எகிப்திய இஸ்லாமிய ஜிகாத்.
3. அல் காமா அட்அல் இஸ்லாமியா.
4. ஆயுதந்தரித்த இஸ்லாமிய குழு (ஜி.ஐ.ஏ)
5. ஸாலாபிஸ்ட் குறூப் போர் கோல் அண்ட் கொம்பற்.
6. வாபர் கல்ஸா.
7. சர்வதேச சீக்கிய இளைஞர் சம்மேளனம்.
8. கறகொட் முஜாஹிதீன்.
9. ஜய்ஷ் இ முகமட்.
10. லஷ்கர் இ தயாபா.
11. ஹிஸ்புல்லா வெளிவாரி பாதுகாப்பு இயக்கம்.
12. ஹமாஸ் - இஸ் அல்-டின் அல்-குவாசிம் பிரிகேட்ஸ்.
13. பாலஸ்தீனியன் இஸ்லாமிக் ஜிகாத் சகாசி.
14. அபு நிடால் அமைப்பு.
15. இஸ்லாமிக் ஆமி ஒப் ஏடன்.
16. முகாஜ்ஜிஹிடீன் இ கால்க்.
17. குர்திஷ்டன் தொழிலாளர் அமைப்பு.
18. புரட்சிகர மக்கள் விடுதலை அமைப்பு.
19. பாஸ்க் ஹோம்லாண்ட் லிபேர்ட்டி.
20. தமிழீழ விடுதலைப்புலிகள்.


மேற்படி பட்டியலை அமைச்சர் ஜக் ஸ்ரா நேற்று வெளியிட்டு வைத்தார்.

# பொங்கு தமிழ் நிகழ்வுக்கு புலிச்சாயம் பூசவேண்டாம்

## கிழக்குப் பல்கலை மாணவர்கள் எதிர்ப்புக் குரல்

(நமது நிருபர்)

கிழக்குப் பல்கலைக் கழக சமூகத்தினர் ஆகிய நாம் மட்டக்களப்பு வாழ் பொதுமக்கள், பொது அமைப்புக்களுடன் இணைந்து நடாத்திய பொங்குதமிழ் நிகழ்வு, விடுதலைப் புலிகளாலேயே ஒழுங்கு படுத்தப்பட்டது என மாவட்ட இணைப்பதியாரி வி.எல்.ஆர் அன்ரனீஸ் வெளியிட்ட கருத்தை நாம் கண்டிக்கிறோம்' இவ்வாறு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று நடாத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தெரிவித்துள்ளனர்.



நேற்று மதியம் 12.30 முதல் 1.30 மணிவரை நடைபெற்ற இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் நூற்றுக் கணக்கான மாணவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கிய படி

(8ம் பக்கம் பார்க்க)

# வாகரைக்கு உணவுப்பொருள் எடுத்துச் செல்ல தடைஇல்லை, பிரிகேடியர் சொன்னதாக எம்.பி தகவல்.

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்ட இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான வாகரைக்கு உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்வதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளதாக மட்டக்களப்பு மாவட்டப் பாராளு மன்றஉறுப்பினர்.பொன். செல்வராசா தினக்கதிருக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் வாகரைப் பிரதேசத்திற்கு பொதுமக்கள்

(8ம் பக்கம் பார்க்க)

**விமானப்படை போரிடுவதிலும் உளவுப் பார்ப்பதிலும் முன்னேறியுள்ளது**



வீடு, பள்ளிக்கூடம் கோயில் இதுக்கு மேலேயும் முன்னேற்ற மாத்தானேகுண்டு போடுறாங்க.

தமிழ் பேசும் மக்களின் குரலாக ஒலிக்கிறது தினக்கதிர்

# தினக்கதிர்

த.பெ. இல: 06
07, எல்லை வீதி தெற்கு,
மட்டக்களப்பு.
தொ. பே. இல : 065 - 23055

E-mail :- tkathir@snet.lk


## காலம் மாறும் காத்திருப்போம்!

விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டுமென்று பிரித்தானிய அரசைக் கோரும் கோஷங்களும் யையெழுத்து வேட்டைகளும் பாத யாத்திரைகளும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கொழும்பிலும் மற்றும் தென் பகுதியிலும் கடந்த சில வாரங்களாக நடை பெற்று வருகின்றன.

விரைவில் கள்ளத்தனமாக கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் விற்பனை செய்யப்படும் ஆயுதங்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் ஆர்பாட்ட ஊர்வலங்களும் பாத யாத்திரைகளும் நடத்தப்படவேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.

கொழும்பில் கள்ளச் சந்தையில் ரீ.56 ரக துப்பாக்கி பதினையாயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறதென்றும் கையெறி குண்டு ஐந்நூறு ரூபாய்க்கு கிடைக்கிறது என்றும் காவல் துறையில் பொறுப்பு வாய்ந்த பதயிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரே தெரிவித்திருக்கிறார்.

சிறிய ஆயுதப் பாவனைகளின் அதிகரிப்பு குறித்து கொழும்பில் அண்மையில் ஒரு கருத்தரங்கு நடந்தது. இக் கருத்தரங்கில் பேசிய ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியான செனிவிரத்தின கள்ளச்சந்தையில் மலிவு விலைக்கு ஆயுதங்கள் கிடைப்பது பற்றித் தெரிவித்தார்.

இலங்கையில் ஆயுதங்களைத் தவிர ஏனைய சகல பொருள்களினதும் விலைகள் விஷம் போல் ஏறியுள்ளன என்பதையும் அந்த ஓய்வு பெற்ற அதிகாரி சுட்டிக் காட்டத் தவறவில்லை.

விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டுவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென்றும் சில மாதங்களுக்குள் இதை நிறைவேற்றி விடமுடியும் என்றும் இலங்கையின் பிரதமர் இரத்தினசிறி விக்கிரம நாயகா நம்பிக்கையுடன் கூறி படைக்கு இளைஞர்களைத் திரட்டும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

ஆன்மீகத் தலைவர்களான மடாதிபதிகளும் போர் புரிந்து விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டதன் பின்னரே சமாதானம் பற்றிப் பேசலாமென்று கூறிவிட்டார்கள்.

''பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகளை அழித்து ஒழிப்பதைத் தவிர இப்போது இலங்கையில் வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. மக்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது என்னும் ரீதியில் அரசும் பேரினவாதிகளும் பேரினவாதப் பத்திரிகைகளும் பிரசாரம் செய்து மக்களை வேறு திசையில் கவனம் செலுத்தாமல் இருக்க கவனமாகச் செயல்படுகின்றன.

இலங்கையின் ஒருமைப்பாடு என்பதும், ஒற்றுமை என்பதும், இலங்கை முழுவதும் சிங்கள பௌத்தர்களுக்குரியதென்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைகின்றது.

தமிழர்களுக்கெனத் தனியான தாயகமோ பிரதேசமோ இல்லையென்றும் அவர்கள் கூறுவதிலிருந்தே தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம், சுயநிர்ணயம் என்பவை யாருக்கு என்பது தெளி வாகிறது.

இந்தக் குரலை எழுப்பி பெரும்பான்மைச் சமூக மக்களை வாழ்க்கைச் செலவு உயர்வு பற்றியோ விலைவாசிகள் பற்றியோ சிந்திப்பதற்கு இடமில்லாமல் செய்து விடுகின்றனர்.

வசதி படைத்தவர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் ஆன்மீகத் தலைவர்களுக்கும் இந்தக் கவலையில்லை.

வாழ்க்கையைச் சமாளிப்பதற்கு அரசாங்க ஊழியர்களும், தொழிலாளர்களும், தனியார் ஊழியர்களும் சம்பள உயர்வு கோரிப் போராடுகிறார்கள். இவர்களுக்கு இவை கிடைத்தும் விடுகின்றன.

வேறு வழியில்லாதவர்கள் களவு, வழிப்பறி, கொள்ளை என்று இறங்கிவிடுகிறார்கள். இவர்களுக்கு கொலை, கொள்ளை வழிப்பறி போன்ற செயல்களையே தொழிலாகக் கொண்ட பாதாள உலகக் கோஷ்டிகள் வழிகாட்டிகளாக அமைந்து விடுகின்றனர்.

நாட்டைப் பாதுகாப்பதற்கென ஆயுதங்களும் கணக்கு வழக்கில்லாமல் இப்போது இறக்குமதி செய்யப்பட்டுக் குவிந்துள்ளன.

தேசபக்தியுடன் படைகளில் சேர்ந்தவர்கள் அங்கிருந்துதான் தேசத்தைக் காப்பாற்ற வேண்டியதில்லை. வெளியிலிருந்தும், வேறு வழிகளிலும் தங்களையும் காப்பாற்றி நாட்டையும் காப்பாற்றலாமென்று வெளியே செயற்படுகின்றனர்.

இவர்களுக்கு உதவியாக படைகளிலிருந்தபடியே ஆயுதங்களை வியாபாரம் செய்யும் வியாபாரிகளும் தோன்றியிருக்கிறார்கள்.

''ஊழல் நடவடிக்கைகளிலீடுபடும் பொலிஸ் அதிகாரிகளும் ஆயுதங்களையும்வெடிபொருட்களையும் கையாடி கள்ளச் சந்தையில் விற்பனை செய்கிறார்கள். இதனால் இவற்றை மலிவு விலையிலும் பெறக்கூடியதாக இருக்கிறது. என்று அந்த ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியே கூறியிருக்கிறார்.

இப்பொழுது நாட்டில் கொள்ளைகளும் வழிப்பறிகளும், கொலைகளும் அதிகரித்து வருவதற்குரிய காரணம் தெரிகிறது. பெரும்பான்மை மக்கள் விழித்துக் கொண்டால், ஆயுதங்களைத் தடை செய், ஆயுத இறக்குமதியை தடை செய், கள்ளச் சந்தையில் ஆயுத விற்பனையைத் தடைசெய், ஆயுத வியாபாரிகளைத் தடை செய்து கைது செய் என்று ஆர்ப் பாட்ட ஊர்வலமும் பாதயாத்திரையும் சென்று கோஷமிடத் தொடங்குவார்கள். விலைவாசி உயர்வதைத் தடை செய் என்ற குரலும் ஒலிக்கத் தொடங்கும்.

இந்த நிலை தோன்றுவதற்கு அதிக காலம் செல்லாதென்றே எதிர்பார்ப்போம். காலம் மாறும் காத்திருப்போம்.

# சமாதானத்தை ஏற்படுத்தி எங்கள் சங்கடங்களை நீக்க உதவுங்கள்

## சமாதானத் தூதுவருக்கு வட்டக்கச்சி மக்கள் மனு

(வவுனியா நிருபர்)

நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல் ஹெய்முக்கு வட்டக்கச்சி பொதுஜன அமைப்புக்களான பிரதிநிதிகள் மற்றும் மாணவர் ஒன்றியம் ஆகியவை ஒன்றிணைந்து மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிறிலங்கா அரசின் பேரினவாதச் செயற்பாட்டினால் தமிழ் மக்களாகிய நாம் தொடர்ந்து அல்லப்பட்டு வருகின்றோம். இந்த நிலையில் தாங்கள் சமாதானத்தினைக் காண்பதற்காக அல்லும் பகலும் அயராது எடுத்து வரும் முன் முயற்சிகள் குறித்து பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு தமிழ் மக்கள் அனைவரது அபிலாசைகளை வெளிப்படுத்தும் முகமாக இந்த மனுவை தங்களின் மேலான கவனத்திற்குத் தருகின்றோம்.

வரலாற்று ரீதியாக சிறிலங்கா பேரி தினவாத அரசுகள் தமது மேலாதிக்க நடவடிக்கைகளினால் அடக்கி அல்லல்பட வைத்துள்ளன. இதனால் தமிழ் மக்களாகிய நாம் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறோம்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விடுதலைப் புலிகள் அமைப்பினர் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக மூன்றாவது முறையாகவும் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்த அறிவிப்பைச் செய்து சமாதானத்தினைக் காண வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

ஆனால் சிறிலங்கா அரசானது போர் நிறுத்தத்தை ஏற்காது நிராகரித்ததோடு போர் நடவடிக்கையினை தொடர்வதும் போருக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளதும் வேதனைக்குரிய விடயமாகும்.

சமாதானத்திற்கான போர் எனச் சொல்லிக் கொள்ளும் அரசின் செயற்பாடு ஆயுத வன்முறை ரீதியாக அதாவது போர் வன்முறையைக் கொண்டது வெளிப்படையாகவுள்ளது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை ஒரு தேசிய இனத்திற்கு உரித்தான சுய நிர்ணய அடிப்படையில் உரித்தான, சுதந்திரமான, கௌரவமிக்க, வாழ்விற்கே உறுதி செய்யும் நடவடிக்கைகளை தாம் வரவேற்கின்றோம். இதற்காக அனைத்துலக சமூகமும் தங்களது நோர்வே அரசாங்கமும் தாங்களும் முன்னெடுக்கும் நீடித்த சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டும் என்பதில் நாம் அக்கறை கொண்டுள்ளோம். ஆவலாய் இருக்கின்றோம்.

இங்கு சமாதானப் பேச்சுக்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக தமிழ் மக்களது சுமுகமான வாழ்க்கையை உருவாக்குவதற்கான நடவடிக்கையை இன்னலுறும் தமிழ் மக்களது சார்பில் போர் முன் முயற்சிகளை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்து நிரந்தர சமாதானத்திற்கான அனைத்து முயற்சிகளையும், முன்னெடுப்பதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து எமது சுபிட்சமான கௌரவம்மிக்க வாழ்வினைப் பெற வழி சமைக்க வேண்டுமென தங்களைக் கேட்டுக் கொள்கிறோம் என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோனலிஸாவின் புன்னகையில் என்னதான் இருக்கிது?

சுமார் 500 வருடங்களாக லியோனர்டோ டாவின்ஸி வரைந்த மோனாலிஸாவை மக்கள் புதிராக பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

முதலில் அவள் புன்னகைக்கிறாள். சிறிது நேரத்தில் அந்த புன்னகை கரைந்து போய்விடுகிறது.

சில நிமிஷங்களில் அந்தப் புன்னகை மீண்டும் வருகிறது. பிறகு மீண்டும் மறைகிறது.

இந்தப் பெருமாட்டியின் முகத்தில் என்னதான் இருக்கிறது? எப்படி இந்த மகா ஓவியக் கலைஞன் மர்மமான உணர்வை இந்த முகத்தில் கொண்டு வந்தான்? ஏன் மற்ற ஓவியர் களால் இந்த மாதிரி ஓவியம் வரைய முடியவில்லை?

இத்தாலியர்கள் மோனாலிஸாவின் புன்னகைக்கு ஒரு வார்த்தை வைத்திருக்கிறார்கள். *sfumato* இதற்கு அர்த்தம் 'கலங்கலான' அல்லது 'குழப்பமான' அல்லது 'கற்பனைக்கு மட்டும் எட்டும்' என்பதானது.

இப்போது ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் நரம்பு மற்றும் மூளை அறிவியலில் வேலை செய்யும் டாக்டர் மார்கரெட் லிவிங்ஸ்டன் இதற்கு குழப்பமின்றி கலங்கலின்றி ஒரு விளக்கம் தருகிறார்.

மோனாலிஸாவின் புன்னகை வருவது போலவும் போவது போலவும் நமக்குத் தோன்றுவதன் காரணம், நமது மூளையும் நமது கண் காட்சி அமைப்பும் வேலை செய்யும் விதத்தால் என்று சொல்கிறார்.

டாக்டர் லிவிங்ஸ்டன் கண் வேலை செய்யும் முறையை நன்றாக் தெரிந்தவர். கண்ணும், மூளையும் எவ்வாறு பல வேறு ஒளியில் பல்வேறு ஒளி விகிதத்தில் வேலை செய்கிறது என்பதில் அதிக ஆர்வமுள்ளவர். ஓவியங்களையும் மூளையையும் பற்றி ஒரு புத்தகம் எழுதுவதாக இவர் இருந்தபோது இவரின் நண்பர் ஓவியக்கலை வரலாற்றை நன்றாகப் படிக்கச் சொன்னார்.

"*E. H. Gombich* எழுதிய *The Story of Art* புத்தகத்தை நான் வாங்கிப் படித்தேன். அதில் அவர் மோனாலிஸா ஓவியத்தைப் பற்றி "இந்த ஓவியத்தை நூறு தடவை பார்த்திருப்பீர்கள். ஆனால் பாருங்கள். வெறுமே பாருங்கள்' என்று சொல்கிறார். எனவே இதை வெறுமே பார்த்துக் கொண்டிருந்தேன்" அப்போது லிவிங்ஸ்டன் அதில் பளிச் சென்று இருந்து மறையும் குணத்தை கண்டார். "பின்னர் நான் வீட்டுக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது



தான் அதை உணர்ந்தேன்" என்றார். "என் கண்கள் எதை பார்த்துக் கொண்டிருந்தன என்பதை வைத்துத் தான் மோனாலிஸா சிரித்துக் கொண்டிருந்தாளா இல்லையா என்பதைக் கண்டு பிடித்தேன்" ஆகவே அறிவியற்பூர்வமான விளக்கம் உடனே தெரிந்தது.

மனித கண்ணுக்கு உலகத்தைப் பார்க்க இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று மத்திய பகுதி. இது *fovea* என்று வழங்கப்படுகிறது. இதில் வர்ணங்களும், நுணுக்கமான எழுத்துக்களும், நுணுக்கமான விஷயங்களும் கண்டுகொள்ளப்படுகின்றன. இரண்டாவது சுற்றுப்புற பகுதி. இது மத்திய *fovea*வைச் சுற்றி இருக்கும் பகுதி. இதில் கறுப்பு வெள்ளையையும், நிழல்களையும், பொருள்களின் நகர்வையும் மனிதர்கள் அறிந்து கொள்கிறார்கள்.

மனிதர்கள் ஒரு முகத்தைப் பார்க்கும்போது அவர்கள் அந்த முகத்தின் கண்களையே வெகுநேரம் பார்க்கிறார்கள். எனவே ஒருவரின் மையப்பார்வை மோனாலிஸாவின் கண்ணில் இருக்கும் போது அவரது தெளிவற்ற பார்வை அவலது வாயில் இருக்கிறது. ஆனால் சுற்றுப்புற பகுதிக்கு நுணுக்கமான விஷயங்களில் ஆர்வமில்லாததால், அது மோனாலிஸாவின் கன்ன எலும்புகளில் உள்ள நிழலைப்பார்க்கிறது. இந்த நிழல்கள் புன்னகையின் தோற்றத்தைத் தருகின்றன.

ஆனால் பார்ப்பவரின் கண்கள் உண்மையிலேயே மோனாலிஸாவின் வாய்க்குச் செல்லும்போது அவரது மத்தியப் பார்வை நிழல்களைப் பார்ப்பதில்லை. "அவளது வாயைப்பார்த்து அவளது புன்னகையை நீங்கள் நிச்சயம் பிடிக்கமுடியாது" என்று டாக்டர் லிவிங்ஸ்டன் சொல்கிறார்.

பார்வையாளர்கள் கண்களை அந்த முகத்தின் மீது ஓட்டும்போது பளிச்சென்று நின்று மறையும் அவளது புன்னகை தோன்றி மறைகிறது. நடிகை ஜீனா டேவிஸ் முகத்தை பார்த்தால் உங்களுக்குத் தெரியும். அவள் எப்போதும் புன்னகைத்துக் கொண்டிருப்பதாகத் தோன்றும். ஆனால் அவள் புன்னகைத்துக் கொண்டிருப்பதில்லை. ஏனெனில் அவளது கன்ன எலும்புகள் பிரதானமானவை.

"மோனாலிஸாவின் மர்மத்தை எடுத்துவிடுவது என் நோக்கமல்ல" என்றும் சொல்கிறார் டாக்டர் லிவிங்ஸ்டன்.

"லியோனர்டோ டாவின்ஸி ஒரு ஜீனியஸ். இவர் நிஜ வாழ்க்கையில் இருக்கும், ஆனால் யாரும் சட்டென்று கண்டுபிடித்துவிடாத ஒரு விஷயத்தை எடுத்து காண்பித்திருக்கிறார். இதைப் புரிந்து கொள்ள நமக்கு 500 வருடங்கள் ஆகியிருக்கின்றன"

இந்த விளைவை ஏன் மற்ற ஓவியர்கள் காப்பியடிக்கவில்லை என்பது எனக்குத் தெரியவில்லை என்கிறார் இவர்.

டுப்ளிகேட் மோனாலிஸா செய்யவேண்டுமென்றால், வாயை பார்க்காமல் அந்த வாயை வரையவேண்டும். இது எப்படிச் செய்யமுடியும் என்பது இன்னும் ஒரு மர்மம்தான

## இறந்து பிறந்த குழந்தைக்கு 19 ஆண்டுக்குப் பின் விசாரணை

(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள ஒரு மருத்துவமனையில் 1983-ம் ஆண்டு ரோஸ்- பிலிப் தம்பதியரின் குழந்தை இறந்து பிறந்தது. பிரேத பரிசோதனைக்கு பிறகு அக்குழந்தையை தகனம் செய்ய பெற்றோர் ஒப்புக் கொண்டனர். மருத்துவமனை சார்பில் 5 வாரம் கழித்து அக் குழந்தை உடல் தகனம் செய்யப்பட்டது. மருத்துவமனை கழிவு பொருட்களுடன் சேர்த்து வைத்து எரித்துவிட்டனர்.

அங்கு லிவர்பூல் பகுதியில் குழந்தைகளின் உடல் உறுப்புகள் திருடப்படுவதாக புகார்கள் வந்தன. இதையடுத்து 19 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது அந்த குழந்தையின் தகனம் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று பெற்றோர் போர்க்கொடி தூக்கி உள்ளனர். மருத்துவமனையில் பிறப்பு சான்றிதழ் பதிவு செய்யப்படவில்லை. தகனம் செய்ததற்கான சான்றிதழும் இல்லை. இது சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தி இருக்கிறது. இதுபற்றி தந்தை பிலிப் (வயது45) கூறுகையில், எதுவும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. இதுபோல மற்ற பெற்றோர்களும் பாதிக்கப்பட்டு இருக்கலாம். எனவே விசாரணை நடத்த வேண்டும் என்று கோருகிறோம் என்றார்.

## வெள்ளப்பெருக்கால் 2 இலட்சம் மக்கள் இடம் பெயர்வு

முஸாம்பிக்கில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கை அடுத்து முஸாம்பிக் மீட்புப்பணியினர் சுமார் இரண்டு இலட்சம் பேரை வெள்ள அச்சுறுத்தல் நிலவும் பகுதியில் இருந்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை தெற்கு செம்பிஸி ஆற்றுப் பள்ளத்தாக்கில் உள்ள சுமார் 34 ஆயிரம் மக்களை அப்புறப்படுத்தல் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்துவதாகவும் சுற்றாடல் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த மீட்புப் பணிகளுக்கு அதிகளவான படகுகளும் விமானங்களும் தேவைப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும் 75 பேர் வீடுகளை இழந்திருப்பதுடன் சுமார் 40 பேர் உயிரிழந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புட்டின் கொரிய ஜனாதிபதியை சந்தித்து பேச்சு

(மாஸ்கோ)

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் தென் கொரிய ஜனாதிபதி கிம்ஜிங்சுங்கை நேற்று முன்தினம் சந்தித்து உரையாற்றினார்.

இரு நாடுகளுக்குமிடையே வர்த்தக உறவு மற்றும் ராஜிய தொடர்புகளை வளர்த்துக் கொள்வது என்பன ரீதியான இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

மேலும் இச்சந்திப்பைத் தொடர்ந்து இரண்டு தலைவர்களும் கூட்டுப் பிரகடனம் ஒன்றையும் வெளியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை பிராந்திய புவிசார் அரசியலுக்கு வடக்கு மற்றும் தெற்கு கொரியாக்களின் உறவுகள் மிகவும் முக்கியமானது என ரஷ்யா கருதுகின்றது என கொரியாப் பிரமுகர்கள் மத்தியில் உரையாற்றிய ரஷ்ய ஜனாதிபதி புட்டின் கூறியுள்ளார்.



ஈராக்கின் வெளிநாட்டமைச்சர் முகமட் ஸயிட் அல்ஷஹா(இடது) ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் நியூயோர்க்கில் இரண்டு நாள் பேச்சுவார்த்தையின் ஆரம்ப வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படத்தையே மேலே காண்கின்றீர்கள்.

## புற்றுநோய் ஒழிப்பில் புதிய சாதனை

(லண்டன்)

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் லுக்குமியா எனும் ரத்தப்புற்றுநோய் மற்றும் புற்றுநோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இனி இவர்களை இந்த துயரங்களில் இருந்து விடுவிக்க புதிய மருத்துவ புரட்சி கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. 6 ஆண்டுகள் நடந்த ஆராய்ச்சி முடிவில் இது கண்டறியப்பட்டு உள்ளது.

இரத்தப்புற்றுநோய் ஏற்பட முக்கிய காரணம் உடல் செல்லில் டபிள்யூடி 1 என்ற தனிப்பட்ட மரபணு அதிவேகமாக செயல்படுவதுதான் என கண்டறிந்துள்ளனர். இந்த் குறிப்பிட்ட மரபணுவை குறிவைத்து தாக்கி அழித்து விடும் நவீன முறை இப்போது கையாளப்பட உள்ளது. இதற்காக டி செல்ஸ் எனும் உடல் அணுக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இரத்தப் புற்று மட்டும் அல்லாமல் மார்பு புற்று மற்றும் நுரையீரல் புற்று ஒழிப்புக்கும் இந்த புதிய முறையை பயன்படுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மணிப்பூரிலும் போர் நிறுத்தம்

(மணிப்பூர்)

மணிப்பூர் மாநிலத்தில் பிரிவினை கோரிப் போராடும் தீவிர வாதக்குழுக்கள் மீதான தாக்குதல்களை நாளை முதல் ஒரு மாத காலத்துக்கு நிறுத்தி வைப்பதாக மணிப்பூர் அரசு அறிவித்துள்ளது.

## குஜராத்தை கிரோஷிமா போன்று நினைவிடமாக மாற்ற நடவடிக்கைகள்

(புதுடில்லி)

பூகம்பத்தினால் பாதிக்கப்பட்ட குஜராத் மாநிலத்தின் பல இடங்களை கிரோசிமா போன்ற தொரு நினைவிடமாக மாற்றிய மைக்க அம்மாநில அரசு நினைத்திருக்கிறது. கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேரின் உயிரை பலி வாங்கிய பூகம்பத்தின் கருமையை சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவூட்டும் நினைவிடங்களாக இப்பகுதிகள் அமைக்கப்படும் என்று மாநில முன்னாள் சுகாதார அமைச்சர் அச்சோட் பட் கூறினார்.

ஜப்பானின் பழைய நகரமாக கிரோசிமா மாற்றப்பட்டுள்ளது. குஜராத் பூகம்பத்தை அடுத்து நடந்து வரும் மறுவாழ்வுப் பணிகளில் ஜாதி மதம் என்ற பாரபட்சம் காட்டப்படுகிறது என்ற குற்றச்சாட்டைப் பிரதமர் மறுத்திருக்கிறார்.

மக்களவையில் இது குறித்து விவாதத்தில் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பேய் எதிர்க்கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தை அரசியல் ஆக்கப்பார்க்கின்றன என்று கூறினார்.

## பெஸ்ட் இளைஞர் கழகத்தின் பாராட்டுக்குரியோர்

(மருதமுனை இப்றாகீம் எம்.பாயிஸ்)

பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் மருதமுனை பெஸ்ட் இளைஞர் கழகம் அதன் அங்கத்தவர்களையும், பல்வேறு கோணங்களில் அவர்களின் திறமைகளுக்கேற்ப அவர்களை உயர்த்தி விடுவதிலும் உற்சாகமாகவே இருந்து வருகின்றது. இந்த வகையில் சாரணியத்துக்கான ஜனாதிபதி விருதுகள் பெற்ற கழக அங்கத்தவர்களான எம்.ஜே.எம்.டில்சாத், எம்.எம்.நஸ்மி ஆகியோருக்கும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட மாவட்ட ரீதியான போட்டிகளில் அம்பாறை மாவட்டத்தில் பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்ற எம்.ஏ.எம்.றிப்ஹி, அபிநயத்தில் முதலிடம் பெற்ற ஏ்.பீ.எம்.நயீம் ஆகியோருக்கும் கழகத்தின் அமைப்பாளராகவும் தலைவராகவும், செயலாளராகவும் கடமையாற்றுவதோடு தமிழ், முஸ்லீம் இன உறவைப் பேணுவதில் அதிக செயற்பாட்டுடனும் செயல்பட்டு சமூக முன்னேற்றத்திற்காக உழைக்கின்றவர் என்ற வகையில் ஜனாப் யூ.எல்.எம்.ஹனீபா (மருதூர்கனி) அவர்களை பிரதம அதிதியாகக் கொண்ட பாராட்டு விழாவுக்கான ஏற்பாடுகளை பெஸ்ட் இளைஞர் கழகம் மேற்கொண்டு வருவதாக கழகத்தின் முக்கிய உறுப்பினர் எம்.ஐ.எம்.பாயிஸ் தெரிவித்துள்ளார்.




## காஷ்மீர் கலவரங்களை தொடர்ந்து இந்திய பாதுகாப்பு கட்டமைப்பு மாற்றம்

(புதுடில்லி)

இந்தியாவின் பாதுகாப்பு கட்டமைப்பை சீர் செய்வதுடன் பிரதம பாதுகாப்பு அதிகாரி என்ற பதவி ஒன்றையும் உருவாக்க வேண்டும் என்று இந்திய மாகாண அமைச்சர்கள் குழு ஒன்று கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான அறிக்கை ஒன்றும் பிரதமர் வாஜ்பாயிடம் சமர்பிக்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குரிய காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தானின் பின்னணியில் கலவரங்கள் உருவானது தொடர்பாக இந்திய தேசியப் பாதுகாப்பு குறித்து கடும் விமர்சனங்கள் உருவானதைத் தொடர்ந்தே நாட்டின் பாதுகாப்பு கட்டமைப்பை சீர் செய்யுமாறு அறிக்கை சமரப்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## போர்னியா தீவில் மீண்டும் இனக்கலவரம் அச்சத்தால் மக்கள் இடம்பெயர்வு

இந்தோனேசியாவின் போர்னியோ தீவில் மீண்டும் இனக்கலவரம் தலை தூக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சுதேச வாசிகள் குழு குடியேற்ற வாசிகளின் வீடுகள் பலவற்றை எதிர்த்து வன்முறையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கலவரங்களை அடக்கும். வகையில் போனியோ தீவுக்கு மேலதிக துருப்பினர்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பேர்னியோ தீவில் தொடரும் வன்முறைகளினால் சுமார் 500 பேருக்கு மேல் உயிரிழந்திருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் பெரும் இடப்பெயர்வு அவலமும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வட இந்தியாவில் பூமி அதிர்ச்சி மக்கள் பதட்டம்

வட இந்தியாவில் நேற்று ஏற்பட்ட பூமியதிர்ச்சியை அடுத்து மக்கள் மிகுந்த பதட்டம் அடைந்துள்ளதுடன் தமது வீடுகளைவிட்டு வீதிகளுக்கு ஓடியதாக வும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுடில்லியில் இருந்து 70 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வட மாநிலமான கரியானாவில் திவானப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. நேற்றுக்காலை இந்திய நேரப்படி 8.12 அளவில் 4.7ரிச்டர் அளவு பூமி அதிரச்சி ஏற்பட்டதாகவும் எனினும் சேத விபரங்கள் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்றும் அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.


## ஈராக் ஐ.நா.சபை.நடாத்திய பேச்சு தீர்மானம் எதுவுமில்லாமல் முடிவு

பத்துவருடகால பொருளாதார தடை தொடர்பாக ஈராக்கும் ஐக்கிய நாடுகள் சபையும் மேற்கொண்ட இருநாள் பேச்சுவார்த்தைகள் நேற்றுமுன்தினம் முடிவடைந்தன.

எனினும் தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் ஒருவார காலத்துக்குள் மீண்டும் இரு தரப்பினரும் சந்திப்பது என்று இணக்கம் காணப்பட்டதாகவும் ஈராக் வெளிவிவகார அமைச்சர் முஹம்மட் அல்ஷஹார் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டப் பேச்சு வார்த்தைகள் ஒருசில வாரத்துக்குள் நியுயோர்க்கில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஈராக் மீதான பொருளாதாரத் தடை தளர்த்தப்படுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதனைக் குழுவுக்கு அனுமதி வழங்குவது அவசியம் என்ற பிரதான நிபந்தனை முன் வைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



மேற்கு கொரியாவின் தலைநகரான "சியோலில்" கடந்த செவ்வாயன்று தேசிய நினைவாலயத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்புட்டின் தூபச் சட்டியை தொட்டுக் கொண்டிருப்பதை காணலாம்.

கடந்த திங்களன்று சியோலில் வந்திறங்கிய ரஷ்ய அதிபர் மொஸ்கோவின் பொருளாதாரத்தை விரிவடையச் செய்வது பற்றி சியோலில் அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மட்டக்களப்பு பஸ் டிப்போக்களில் நிலவிய முறுகல் நிலை முடிந்தது

(கல்லாறு நிருபர்)

நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி லிமிடட், வாழைச்சேனை, ஏறாவூர் சாலைகளுக்கிடையே, கொழும்புக்கான பஸ் சேவையை நடாத்துவதில் நீண்ட காலமாக நிலவி வந்த முறுகல் நிலை, நியூ ஈஸ்டன் கம்பனி லிமிடட் கல்முனை தலைமை காரியாலயத்தில் அண்மையில் செயலாற்றுப் பணிப்பாளர் எஸ்.எல்.யு. லெவ்வையினால் ஒழுங்கு செய்யப்பட்ட சமரச மகாநாட்டினால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இம் மகா நாட்டுக்கு வாழைச்சேனை, ஏறாவூர் சாலைகளுக்கான முகாமையாளர்கள் இருவரும் அழைக்கப்பட்டு, பஸ் சேவையை இரு சாலையினரும் சிறு மாற்றங்களுடன் மேற்கொள்வதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அம் முடிவின் படி வாழைச்சேனை சாலையால் இது வரை ஏறாவூரில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட கொழும்புக்கான பஸ் சேவை மார்ச் முதலாம் திகதியிலிருந்து பி.ப1.30க்கு செங்கலடியில் இருந்து ஆரம்பிப்பதற்கும், ஏறாவூர் சாலையால் ஆரம்பிக்கப்படும் கொழும்புக்கான பஸ் சேவை பி.ப2.00 மணிக்கு ஏறாவூரில் இருந்து ஆரம்பிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எஸ்.எல்.யு.லெவ்வை தெரிவித்தார்.

சுமார் ஒரு வருட காலமாக இழுபறிப்பட்டு வந்த இந்த பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு, இரு சாராரையும் பல தடவை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்திய போதும் இத் தடவையே இப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டுள்ளதாக லெவ்வை தெரிவித்தார்.

## மீன்பிடியை பயிலும் மாணவர்களுக்கு போதிய பயிற்சி வேண்டும்

(க.ஜெகதீஸ்வரன்)

கொழும்பில் மீன்பிடி சம்பந்தமான மேற்படிப்புக்களைத் தொடர பல்கலைக்கழகமொன்று அமைக்கப்பட்டுள்ளது. சமூகக் கல்விப் பாடத்திட்டத்தில் மீன்பிடியும் ஒரு பாடமாக சேர்க்கப்பட்டுள்ளதால் மாணவர்களுக்கு நன்னீர் மீன்பிடி, ஆழ்கடல் மீன்பிடிப்பு, கரையோர மீன்பிடி சம்பந்தமான போதிய கற்றலை ஏற்படுத்துவது ஆசிரியர்களாகிய உங்கள் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும் என மட்டக்களப்பு நாவலடி பிரதேச கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியின் அதிபர் டி.சுபராஜன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மட்டு இந்து கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நவீன மீன்பிடி சம்பந்தமான ஒரு நாள் பயிற்சிச் செயலமர்வின் ஆரம்ப வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசியதாவது, மீன்பிடியை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கு போதிய பயிற்சிகளையும், போதனைகளையும் வழங்கி ஆசிரியர்களை மேலும் தயார்படுத்தும் வகையிலேயே இப்பயிற்சிநெறி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சிகள் மட்டு அம்பாறை மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றார்.

மண்முனை வடக்கு கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் கலந்து கொண்ட இப்பயிற்சிச் செயலமர்விற்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீகாந்தராஜா தனது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது, விவசாயத்தைப் போன்று மீன்பிடியும் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு இளம் வயதினரை தயார்படுத்த வேண்டும் என்றார்.

நவீன மீன்பிடி சம்பந்தமான விரிவுரைகளை நாவலடி பயிற்சிக் கல்லூரியின் விரிவுரையாளர்களான கே.தவராஜா, எம்.அரசரெட்ணம் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

## உள்ளூர் சொகுசு பஸ் கட்டணம் சாதாரண கட்டணமாக்கப்பட்டுள்ளது

உள்ளூர் சொகுசு பஸ்களுக்கான கட்டணத்தை நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி லிமிடட் கம்பனியின் சாலைகள் சாதாரண கட்டணத்திற்கு மாற்றியுள்ளன. இவ் பஸ் வண்டிகளுக்கான கட்டணம் 1 1/2 மடங்காக அறவிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இத்தகைய உள்ளூர் நகரங்களுக்கிடையேயான சேவையில் ஈடுபடும் சொகுசு பஸ்களில், கடந்த கால பஸ் கட்டணத்தை கருத்தில் கொண்டு பிரயாணிகள் பயணிப்பது குறைவாகவே காணப்படுகின்றது. கட்டணக் குறைப்பு உள்ளூர் சேவைகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. கொழும்புக்கான கட்டணம் தற்போதும் 1 1/2 மடங்காகவே அறவிடப்பட்டு வருகின்றது.

## தொழில்நுட்ப விரிவுரையாளராக விஜயராஜா!

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியின் மோட்டார் வாகன தொழில்நுட்ப விரிவுரையாளராக விஜயராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனம் தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரியில் சிரேஸ்ட போதனாசிரியராகக் கடமையாற்றினார்.

மோட்டார் வாகன தொழில் நுட்பப் பொறியியலில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற இவர். மிக விரைவில் மட்டக்களப்பு தொழில் நுட்பக்கல்லூரியின் உயர் பதவி ஒன்றுக்கு நியமிக்கப்பட உள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## புதிய சமாதான நீதவான்



வாகரைப் பிரதேசப் பிரிவிலுள்ள பால்சேனை என்னும் கிராமத்தைச் சேர்ந்த கே.நாகலிங்கம் மட்டக்களப்பு மாவட்ட சமாதான நீதிவானாக மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

பால்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஒரு பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமாவார்.

## விளையாட்டு உத்தியோகத்தர் நியமனம்

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

காரைதீவு பிரதேச செயலகத்திற்கு முதற் தடவையாக விளையாட்டு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். காரைதீவு பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தராக, கதாபி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சாய்ந்த மருதுவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

## லயன்ஸ் கழகத்தின் அன்பளிப்பு!

(களுவாஞ்சிக்குடி நிருபர்)

களுவாஞ்சிக்குடியில் புதிதாக உருவாக்கப்பட்டு, பரிகாரக் கற்பித்தல் பாடநெறியை நடாத்தி வரும், மாணவர் அபிவிருத்தி நிலையத்திற்கு, களுவாஞ்சிக்குடி லயன்ஸ் கழகம் சில பொருட்களை அன்பளிப்புச் செய்துள்ளது. பெற்றோல் மக்ஸ், ஐந்து விளக்குகள், பாய்கள் இவற்றில் அடங்கும். லயன்ஸ் கழகத் தலைவர் ரஞ்சித் மூர்த்தியினால் இவை வழங்கப்பட்டுள்ளன.

லயன்ஸ் கழகம் இந்நிலையத்தின் எதிர்கால அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்க இருப்பதாக, லியோ கழக உறுப்பினரும் மாணவர் அபிவிருத்தி நிலையத்தின் உறுப்பினருமாகிய பாலுச்சந்திரன் மயூரதன் தெரிவித்தார்.

# செய்திச் சுருக்கம்

## காற்றுக்கென்ன வேலி ஐ.நா.ஆணைக்குழு முன்

காற்றுக்கென்ன வேலி திரைப்படத்துக்கு தடைவிதிக்கப்பட்டமை. கருத்து சுதந்திரத்தை மீறும் செயலாகும். எனத் தெரிவித்துள்ள தமிழ் நாடு மனித உரிமைகள் குழுவின் அமைப்பாளர் டி.எஸ்.எஸ்.மணி இந்த விடயத்தில் ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் தலையிட்டு தடையை நீக்கித்தர வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

தணிக்கைச் சபை மேற்படி படத்துக்கு விதித்த தடையை நீக்குமாறு சபையிடம் வலியுறுத்தும் படி மணி தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சர்வதேச மன்னிப்பு சபை ஆகியவற்றிடமும் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் புகழ்பாடுவதாக மேற்படி படம் அமைந்துள்ளது எனக் கூறியே திரைப்பட சான்றிதழ் வழங்கும் மேன் முறையீட்டு விசாரணை மன்றம் காற்றுக்கென்ன வேலி படத்தை தடை செய்துள்ளது என மணி தெரிவித்தார். ஆனால் புலிகளுக்கும் திரைப்படத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை எனவும் அவர் கூறினார்.

## நண்பன் மனைவியை மணந்ததால் வாள்வெட்டு

தனது நண்பனின் மனைவியை திருமணம் முடித்து ஊரை விட்டுச் சென்று ஒரு மாத காலத்தின் பின்பு ஊர் திரும்பிய நண்பன் வாள் வெட்டுக்கு இலக்காகி மரணமான சம்பவமொன்று அனுராதபுரப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் ரொசான் சமிந்த விஜயதுங்க(26) என்பவராவார். இவரின் உடலில் ஆறு இடங்களில் வாள் வெட்டுக் காயங்கள் காணப்பட்டதாக தெரியவருகிறது.

அனுராதபுரம் நகரில் வேலைத்தளம் ஒன்றில் தொழில் புரிந்து வந்த இந்த நபர் அங்கு சந்தித்த நண்பர் ஒருவரின் வீட்டுக்கு அடிக்கடி சென்று வந்ததாகவும் ஆறு குழந்தைகளுக்கு தாயான நண்பனின் மனைவியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

## 17 தமிழ் இளைஞர்கள் கைது

மாலைதீவு ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் 17 தமிழ் இளைஞர் உட்பட 19 பேர் நீர் கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர் கொழும்பு போருதொட பிரதேச ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த போது 24ம் திகதி நண்பகல் நீர் கொழும்பு விசேட பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

21,22 வயது மட்டத்தில் இருந்த இவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, கல்முனை, கைதடி, வல்வெட்டித்துறை, முதலிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களில் இருவர் மட்டுமே சிங்களவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ரி.56 ரக துப்பாக்கி மலிவு விலையில் விற்பனை

கொழும்பில் கள்ளச்சந்தையில் ரி.56 ரக துப்பாக்கி 15 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாகிறது. கிரனைட் ஒன்று 500 ரூபாவுக்கு விலை போகிறது.

இந்த தகவலை தெரிவித்தவர் வேறுயாரும் இல்லை. பொலிஸ் சேவையில் நீண்டகாலமாக கடமையாற்றி விட்டு அண்மையில் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் தான்.

இலங்கையில் ஆயுதங்களைத் தவிர ஏனைய சகல பொருள்களினதும் விலைகளும் விஷம் போல் ஏறியுள்ளன. நாட்டில் நடைபெற்று வரும் உள்நாட்டு யுத்தமே பொருட்களின் விலை அதிகரிப்புக்குக் காரணம்.

ஊழல் நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகளும் பாதுகாப்பு படை அதிகாரிகளும் ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் கையாடி கள்ளச் சந்தையில் விற்பனை செய்கிறார்கள். இதனால் தான் அவற்றை மிகச் சுலபமாக குறைந்த விலையிலும் பெறக் கூடியதாக இருக்கிறது என்றார்.

## கிழக்கில் தொடரும் கைதுகள்

கல்முனை நீலாவணையைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் காரைதீவு விசேட அதிரடிப்படையினரால் ஞாயிறு காலை 10 மணியளவில் வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதை தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்களான 16 வயதுடைய மகாலிங்கம் சுதர்சன் 20 வயதுடைய கணேசலிங்கம் பகீரதன் 17 வயதுடைய மகேந்திரன் கண்ணன் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

தற்போது இவர்கள் மேலதிக விசாரணைக்காக அம்பாறை நாசகாரத்தடுப்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## பட்டிருப்பு வலய பாடசாலைகளுக்கு
# விஞ்ஞான உபகரணங்கள்.

(தேவ்ஆனந்)

மாகாண கல்வித் திணைக்களத்தின் மூலம் பட்டிருப்பு வலய கல்வித் திணைக்கள பாடசாலைகளுக்கு விஞ்ஞான பாடசாலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மூலம் விஞ்ஞான உபகரணங்கள் இவ் வலயப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட தன் நிமித்தம் குறைந்தளவு 250% மான பரிசோதனைகளாவது பாடசாலைகளில் விஞ்ஞானம் கற்கும் மாணவர் கூட்டு பிரயோகிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# "உண்மையான சமாதானம்
## விட்டுக்கொடுப்புக்களுடன் வரும்

(அரியம்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நகரப்பகுதியில் இரவு 6 மணிக்குப் பின் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச்சட்டம் அமுல் படுத்தப்படுவது போன்ற நிலைமை உள்ளது. இவ்வாறான நிலைமைகள் மாறி நாட்டில் பூரண சமாதானம் ஏற்பட வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட சாரணியத் தலைவருமான ஆர். மோனகுருசாமி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் ஒன்பது பேருக்கு ஜனாதிபதிச் சின்னம் சூட்டும் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நேற்று மாலை மெதடிஸ்த மண்டபத்தில் உரையாற்றிய அரச அதிபர் ஆர் மோனகுருசாமி தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்

உண்மையான சமாதானமான தியாகம், விட்டுக்கொடுப்புக்களுடன்தான் வரவேண்டும் தியாகம், சமாதானம் என்பன உள்ளத்தில் இருந்துதான் உதிக்க வேண்டும் உள்ளத்தில் சமாதானம் ஏற்பட சாரணியத்தின் பங்கு அளப் பரியது. இங்கே வாழுகின்ற தாய் மார்கள் தனது பிள்ளைகளுக்கு மனித நேயம் பற்றி போதிக்க வேண்டும். தமிழ் தாயாகயுளள்வர்கள் சிங்கள மக்கள் பற்றியும், சிங்களத் தாய்மார்கள் தமிழர்கள் பற்றியும் உண்மையான அன்பு. காருண்யத்தை போதிப்பார்களானால் சமாதானம் என்பத உள்ளத்தில் உருவாக வாய்ப்புக் கிடைக்கும்.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பெருமை தேடித்தந்த மட். மத்திய கல்லூரிசாரணர் மாணவர்கள் ஒன்பது பேர் ஒரே தடவையாக ஜனாதிபதி விருது பெற்றமை குறித்து அனைவரையும் பாராட்டுகின்றேன்.

பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சரவணபவான் தமதுரையில்:- ஒரு மனிதன் பல வழிகளிலும் வாழக்கூடியவன் என்பதை சாரண மாணவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர்.

முன்னாள் சாரணர் ஆணையாளரான எஸ்.தேவராஜன் பேசுகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சாரண மாணவர்களின் மேம்பாட்டை போற்ற வேண்டும். ஜனாதிபதியின் இவ்விருதுக்காக இப்பாடசாலை அதிபர், பெற்றோர்கள், சாரண ஆசிரியரான பாஸ்கரன் மற்றும் சகலரும் ஒத்துழைத்தனர் என்றார்.

சாரண மாணவர்களுக்குப் பொருத்தமான எஸ்.பாஸ்கரன் தனதுரையில் மனிதனை மனிதனாக மனித சமூகத்திற்கு மேம்படுத்துவதே சாரணியத்தின் குறிக்கோளாகும் என்றார்.

இந்நிகழ்வில் சாரணர்களின் திறமையை காட்டும் நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது.

சாரண மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வை அரச அதிபர் ஆர்.மோனகுருசாமி மாணவர்களுக்கு சூட்டியுள்ளார். சாரண மாணவர்களின் பல இசை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

## சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் புறக்கணிப்பு;
# தமிழ்மொழி மூல மாணவர்கள் கவலை

(அக்கறைப்பற்று நிருபர் எம்.பீ.ஹாறூன்)

இலங்கைச் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் மாணவர் மத்தியில் பயன்படுத்தப்படும் அநேகமான ஆவணங்கள் தமிழ் மொழி முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக இப்பல்கலைக்கழகத்தில் பயிலும் தமிழ்மொழி மூல மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி பல்கலைக் கழகத்தில் அறிவித்தல்கள், விண்ணப்பப் படிவங்கள், அறிக்கைகள், அறிவுறுத்தல்கள் உட்பட பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் என்பவற்றில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு அவை தனிச் சிங்களத்திலேயே அமைந்திருப்பதால் அவற்றை வாசித்து விளங்கிக் கொள்வதிலும் அவற்றை பூரணப்படுத்துவதிலும் தமிழ்மொழி மூல மாணவர்கள் மிகுந்த அவலத்தினை எதிர்கொண்டு வருவதாக அறிவிக்கப் படுகின்றது. இதனால் விண்ணப் படிவங்களைத் தவறாக பூர்த்தி செய்யக் கூடிய அவல நிலையும் உருவாகியுள்ளது.

எனவே, மேற்படி பல்கலைக்கழகத்தின் ஆவணங்களில் தமிழ், ஆங்கில மொழிகளும் உள்ளடக்கப்படல் வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# 'மனங்களிலே......நிறங்கள்' வெளியிடப்பட்டது

(அக்கரைப்பற்று நிருபர் எம்.பீ.ஏ.ஹாறூன்)

ஒலுவில் அமுதனின் ஐந்தாவது நூலான "மனங்களிலே......நிறங்கள்" சிறுகதைத் தொகுதி றக்ஷானா வெளியீட்டகத்தின் வெளியீடாக கடந்த புதன் (2001.02.21) காலை அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பிரபல சட்டத்தரணியும் பதில் மாவட்ட நீதவானுமாகிய அல்-ஹாஜ் ஏ.எம்.பதுறுதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு அக்கரைப்பற்று நேர்சிங் ஹோமின் நிர்வாகப் பணிப்பாளர் டாக்டர் அல்-ஹாஜ் எஸ்.எம்.ஏ.ஜப்பார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

பல்துறை மேதைகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் கலந்து கொண்ட இவ்விழாவின் இறுதி நிகழ்வாக "துப்பாக்கி தூங்காதோ?" என்னும் தலைப்பில் கவியரங்கு ஒன்றும் இடம் பெற்றது.

கவிஞர் மணிக்கவிராயர் (மணிவாசகம்) தலைமையில் இடம் பெற்ற இக்கவியரங்கில் கவிஞர்களான பாயிஸ் எம்.அஸீஸ், எஸ்.எம்.பீ.எம் அ.ஜமால்கான், எம்.நவாஸ் சௌபி, மாணிக்கவாசகம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கூட்டுறவு கருத்தரங்கு

(நமது நிருபர்)

கூட்டுறவு தினவிழா சம்பந்தமாக கருத்தரங்கு ஒன்று அண்மையில் கொழும்பில் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையால் கூட்டப்பட்டது. இதில் மாவட்ட கூட்டுறவு சபையால் கூட்டப்பட்டது. இதில் மாவட்ட கூட்டுறவு சபைகளின் இயக்குனர் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முக்கிய இரு தீர்மானங்கள் முன்வைக்கப் பட்டன. ஒன்று கூட்டுறவு கீதத்தை கருத்துப் பொதிந்ததாக மாற்றியமைத்தல் மற்றையது கூட்டுறவு இலச்சினையை மாற்றுதல்.

எனினும் கூட்டுறவு கீதத்தை மாற்றும் தீர்மானமே நிறைவேற்றப்பட்டுள்ளது. புதிய கூட்டுறவு கீதத்தை எதிர்வரும்இ ஜுலை மாதத்தில் நடைபெற இருக்கும் சர்வதேச கூட்டுறவாளர்கள் தினத்தில் முதன் முதலாக அறிமுகம் செய்வதற்கான ஒழுங்குகளை தேசிய கூட்டுறவு சபை மேற்கொண்டு வருகின்றது.

# உழவு இயந்திரம் இல்லாத கமநல நிலையம்

(வந்தாறுமூலை நிருபர் ரெத்தினம்)

கமநல சேவை மற்றும் கேந்திர நிலையத்திற்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் வாழைச் சேனை, கிரான், வந்தாறுமூலை, ஏறாவூர், போன்ற பகுதிகளுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் வந்தாறுமூலை தவிர ஏனைய இடங்களில் அந்த கூட்டத்திலும் உழவு இயந்திரம் நாளாந்தம் இருக்கின்றது.

இது இவ்வாறு இருக்க வந்தாறுமூலை கமநல கேந்திர நிலையத்திற்கென வழங்கப்பட்ட உழவு இயந்திரம் இது வரையும் அதன் நிலையத்தில் பகலோ- இரவோ காணப்படவில்லை. அத்துடன் இப்பகுதியில் உள்ளவர்களுக்கு உழவு இயந்திரம் ஒன்று உள்ளதா என்று கூட தெரியாத நிலையில் உள்ளார்கள். ஏனைய பகுதிகளில் அதே நிலையத்தில் உழவு இயந்திரம் நிரந்தரமாக கிடக்கும் போது சாமி கொடுத்தும் பூசாரி கொடுக்காததை ஏன் எங்கள் பகுதிக்கு உட்பட்ட நிலையத்தில் உழவு இயந்திரம் இல்லை. உழவு இயந்திரம் இருந்தால் எவ்வளவு வேலைகளை செய்து கொள்ளலாம் என்று இப்பகுதி விவசாயிகளும் பொதுமக்களும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

அத்துடன் உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கின்றார்கள். இதே மேற்படி உழவு இயந்திரம் ஏறாவூரில் கிடப்பதாக தெரியவருகின்றது.

## பாவனைக்கு உதவாதப் பொருட்கள்
# தீக்கிரையாக்கப்பட்டன.

(களுவாஞ்சிகுடி நிருபர்)

கடந்த வியாழன் 22ம் திகதி பெரிய கல்லாற்றுப் பிரதேசத்தில் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பாவனைக்கு உதவாத, காலாவதியான உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர்களும், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் இதில் கலந்து கொண்டனர். மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களான வரதராஜன், ஜெயரஞ்சன் ஆகியோரின் தலைமையில் நடாத்தப்பட்ட இந்த நடவடிக்கையில், கடை உரிமையாளர்களுக்கு இவ்விடயம் பற்றி தெரியாது என்றும், கால அவகாசம் கோரி வாதாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் கடை உரிமையாளர்களை அழைத்து கடந்த மாதம் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்ரகுராம் காலாவதியான பொருட்கள், காலாவதியான பாவனைக்கு உதவாத பொருட்கள், அயடின் கலந்த உப்புக்கள் பற்றி விளக்கம் அளித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 1980ஆம் ஆண்டு சட்டத்தில், மேற்படி காலாவதியான பாவனைக்கு உதவாத பொருட்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பதை, கடை உரிமையாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம் என தெரிவித்தார்.

இதேவேளை பொது மக்களிடம் இருந்து காலாவதியான, பாவனைக்கு உதவாத பொருட்களின் விற்பனை பற்றி முறைப்பாடுகள் பல கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விஜயனின் கொலை வழக்கில் விடுதலையானவர்கள் மீண்டும் கைது!

**கைது சட்டவிரோதமானது என கூறுகிறார் ஜனாதிபதி சட்டத்தரணி**

விஜயகுமாரணதுங் கவின் கொலையில் சம்பந்தப்பட்டார்கள் என குற்றம் சுமத்தப்பட்ட இருவரில் ஒருவரை எதிர்வரும் மார்ச் மாதம் 12ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் இஷானி ஜயசேன நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

இதில் முதலாவது சந்தேக நபரான டபிள்யு.எம்.தனபால் என்பவரே 1988ம் வருடம் பெப்ரவரி மாதம் 16ம் திகதி நடந்த குமாரணதுங்காவின் கொலையில் முக்கியமான சந்தேக நபராகும் என தெரிவிக்கப்பட்டு, இவரையே விளக்க மறியலில் வைக்கும் படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அடுத்த சந்தேக நபரான துரைரெட்ணம் ஸ்ரீகாந்தன் என்பவர் இக்கொலை தொடர்பான தகவல்களை வழங்கத் தவறியமைக்காக குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

இக்கொலை தொடர்பாக இவ்விரு சந்தேக நபர்களும் 1988 ஆம் வருடம் மே மாதத்திலேயே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்கள். இவர்கள் இருவரும் ஜனாதிபதி கவுன்சிலின் பிரதிநிதி எம்.எல்.எம்.அமீன் மற்றும் கேமா மனாதுங்க, எஸ்.கல்ப்பனா ஆகியோரினால் நீதிமன்றத்தில் கையளிக்கப்பட்டார்கள். மேலும் இவர்கள் குற்றப் புலனாய்வுத் துறையினரால், அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

எனினும் ஜனவரி மாதம் 1989ஆம் ஆண்டில் இவர்கள் இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஆனதன் பின்னர் நவம்பர் மாதம் 1992ம் ஆண்டு இவர்களுக்கு எதிராக இந்தக் குற்றத்தை நிரூபிப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லை என பொலிஸாரினால் விடுதலை செய்யப்பட்டார்கள்.

ஐந்து வருடங்களின் பின் விடுதலை செய்யப்பட்ட இருவரும் மீண்டும் குற்றபுலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டதற்கு எதுவித காரணங்களும் இல்லை எனவும் இது சட்டவிரோதமானது எனவும் அமீன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்கொலையில் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட கேரத் என அழைக்கப்படும் ராஷன் வீரசிங்க என்பவரும் காமினி என அழைக்கப்படும் லயனர் என்பவரும் குற்றப் புலனாய்வுத் துறையினரின் பாதுகாப்பில் இருந்து மறைந்து விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது

மேலும் இரண்டாவது சந்தேக நபரான ஸ்ரீகாந்தனை வழக்கு நடக்கவிருக்கும்.மார்ச் மாதம் 12ம் திகதி நீதிமன்றில் ஆஜராகும் படி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்

# அக்கரைப்பற்றில் திருடர் தொல்லை

(அக்கரைப்பற்று நிருபர் எம்.பீ.ஏ.ஹாறூன்)

கடந்த ஒரு மாத காலமாக அக்கரைப்பற்று நகர்ப்பகுதியிலும் நகரை அண்டிய பிரதேசங்களிலும் இரவுத் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இத்திருடர்கள் இரவு 12 மணிக்குப் பின்னர் வீட்டுக்கு வெளியில் உள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள், ஆடைகள், துவிச்சக்கர வண்டிகள், என்பவற்றுடன் தொலைபேசி, தொலைக்காட்சி அன்ரனாக்களையும் அதன் பூஸ்டர்களையும் களவாடிச் செல்கின்றனர்.

இத் திருடர்களுக்கு அஞ்சிய பொது மக்கள் இத்திருட்டில் இருந்து தங்களின் உடமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அன்ரனாக்களையும், ஏனைய பொருட்களையும் கழற்றி வீடுகளுக்குள் வைத்துள்ளதால் தொலைக்காட்சி, தொலைபேசி பாவனையில் மிகுந்த தடங்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இத்திருடர்களை மடக்கிப் பிடிப்பதற்காக சிலர் கண்விழித்துக் காத்திருந்த போதும் கூட திருடர்கள் இவர்களின் வலையில் சிக்காது புத்தி' சாதுரியமாகத் தப்பித்துக் கொள்வதாகவும் அறியமுடிகிறது. இத்திருடர்கள் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது என்றும் இவர் கள் தூர இடங்களில் இருந்து திருட்டுத் தொழிலுக்காக இப்பிரேதசத்துக்கு வந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

இதனால் பொது மக்கள் அச்சமடைந்துள்ளதுடன் நிம்மதியும் தூக்கமும் இழந்து வருவதாகத் தெரிகிறது.

# அமெரிக்கா தயாரிக்கவிருக்கும் புதிய இராணுவ தளபாடங்களும் நீர் மூழ்கிக் கப்பல்களும்! இதன் செலவும்

## அயல் உலக அரசியல்

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யு புஷ்சை எமது பையன் என மக்கள் அழைக்கத் தொடங்கி உள்ளார்கள்.



தட்டிக் கொடுக்கும் கை பின்னாலே! தாளம் தட்டப் போகும் ஜனாதிபதி புஷ் முன்னாலே

இந்த வாரம் அயல் உலக அரசியலில் இரண்டு முக்கியமான விசயங்கள் அலசப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்று அமெரிக்காவின் இராணுவமயம் சம்பந்தமானது. அமெரிக்காவின் ராணுவபலத்தை புதிய ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பலப்படுத்துகின்றாரா என்பது! அது தொடர்பாக மீண்டும் உலகத்தை ஆளும் அமெரிக்கா என்ற கனவை புஷ் மீண்டும் மறுதலிக்கப் போகின்றாரா என்பது! இக்கட்டுரையில் அதற்கான விடை இருக்கின்றது.

ஜனாதிபதி புஷ் அவர்கள் அறிவித்த அறிவிப்பு ஒன்றில் 5.7 கோடி டாலர்கள் இராணுவச் செலவுக்காகச் செலவிடப்படும் எனக் கூறியுள்ளார். 2.6 கோடி டாலர்கள் இராணுவத் தளபாட ஆராய்ச்சிக்காகவும் ஒதுக்கப்படும் எனவும் கூறிவிட்டார். கூறியது மாத்திரம் அன்றி பாதுகாப்பு பட்ஜெட்டில் உடனடியாக இதனைச் சேர்த்துக் கொள்ளுமாறும் திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். ஆய்வு அடிப்படையில் சொல்லப்போனால் 1990 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்காவின் இராணுவத் தேவைக்கான நிதி பத்து வீதத்தால் குறைவடைந்தே வந்துள்ளது. ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் நடைபெற்ற இராணுவச் செலவீனம் குறைக்கப்படக் காரணமாயிற்று

### புஷ்சின் புதுத்திட்டங்கள்

புஷ்சின் இராணுவத் திட்டம் புதிய யுகத்தை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது. அமெரிக்கா தயாரிக்க இருக்கும் புதிய சில இராணுவத் தளபாடங்களும் அதற்காகச் செலவழிக்கப்பட இருக்கும் நிதியினையும் உற்று நோக்கினால் திகைப்பே ஏற்படும். அதன் விபரங்கள் கீழ் வருமாறு:-

1. **F** 22 போர் விமானம் - உத்தேச செலவு 60கோடி டாலர் (**F 22 Fighter**)

2. ஜொயின்ற் ஸ்றைக் பைற்றர் (**Joint Strike fighter**) 23 கோடி டாலர் (ஆராய்ச்சிக்காகவும், இத்துறை அபிவிருத்திக்குமாக ஒதுக்கப்பட்ட நிதி) இதன் கட்டுமானத்துக்காகச் செலவழிக்கப்பட இருக்கும் நிதி 200 கோடி டாலர்கள்

திக்கவயல் தர்மகுலசிங்கம்

3. இவற்றுடன் செலவுகள் நின்று விடவில்லை. புதிய நீர் மூழ்கிக் கப்பல்களும் (**Sub marine**) கட்டுவதற்காக 65 கோடி டாலர்கள் செலவழிக்கப்பட உள்ளது. இதன் மூலம் ஜோர்ஜ் புஷ் ஒரு சமாதானப் பிரியரா என்ற சந்தேகமும் ஏற்பட்டு உள்ளது. இது சம்மந்தமாக மார்சல் என்ற ராஜதந்திரி கருத்துத் தெரிவிக்கையில் இந்த நிலைப்பாடு அளவுக்கு மீறிய செயல் என்றும் மீண்டும் இது மறு பரிசீலனை செய்ய வேண்டிய பகுதி எனவும் கூறியுள்ளார். அது மாத்திரம் அன்றி ஜப்பானில் நிலை கொண்டிருக்கும் 40,000 படைவீரர்களும், நேற்றோவில்(**NATO**) பங்களிப்பாக இடம் பெற்றிருக்கும் 70,000 அமெரிக்கப் படைவீரர்களும் அமெரிக்காவுக்குச் சுமையே என்ற கருத்தும் இடம்பெற்றுள்ளது. நவீன ரக இராணுவத் தளபாடங்களின் தேவை அதிகரிப்பின் இந்தப் படைகளின் தேவை பெருமளவில் குறைந்தும் விடலாம். அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது நேற்றோ படையமைப்பில் பெருமளவு குறைப்பினை அமெரிக்கா செய்ய வேண்டும் என புஸ் பிரச்சாரம் செய்தது குறிப்பிடத்தக்கது.



அழகான பெண்கள் எல்லாம் அழகாக ஆட்சி நடத்துவரோ? இந்தோனேசிய ஜனாதிபதி வாஹிட்டும் சுகர்ணோவின் மகள் மேகவதி சுகர்ணோ புத்திரியும் படத்தில் காணப்படுகிறார்கள்.

### இந்தோனேசியாவில் ஆட்சிச் சிக்கல்

ஒரு நாட்டில் ஆட்சி நடக்கலாம் ஆனால் நல்லாட்சி நடப்பதற்கு அந்நாட்டில் மூளைப்பலசாலிகளும் வேண்டும். இந்தோனேசியாவில் இன்று சரியான ஆட்சி நடக்கவில்லை, அதனால் சரியான ஆட்சி நடத்த மண்ணின் மைந்தர்கள் கிடைக்க மாட்டார்களா என வெளிநாடுகள் கூட ஏங்குகின்றன. இந்நாட்டின் மீது பச்சாதாபப்படுகின்றன.

### பதினாறு மாத ஆட்சி

இந்தோனேசியாவின் ஜனாதிபதியாக வாஹிட் 16 மாதம் ஆட்சி நடாத்துகின்றார். ஆனால் இது நாட்டாட்சி இல்லை; வெறும் காட்டாட்சி தான்! இந்தோனேசியாவின் கூட்டாட்சி ஆட்டம் கண்டுள்ளது. இவரின் ஊழல் கண்டு பெண்கள் பெரும் தொகையில் ஆர்ப்பாட்டம் நடத்தி உள்ளார்கள். மதரீதியான முரண்பாடுகள் அதிகரித்துக் கொலை கொடிகட்டிப் பறந்தது. இதனை அடக்கும் சக்தி பாதுகாவல் படையினருக்கு வரவில்லை இந்நிலையில் வாஹிட்டின் ஆட்சிக்காலம் எண்ணப்பட்டு வருகிறது. சுகர்ணோவின் மகள் மேகவதி சுகர்ணோ புத்திரியின் ஆதரவு இன்றி இவர் வருங் காலத்தில் ஆட்சி நடாத்த முடியாது. பாராளுமன்றத்தில் 30% செல்வாக்கை மேகவதி கொண்டிருக்கிறார். கடந்த ஆகஸ்ட்டில் வாஹிட்டின் ஆட்சி தப்பிப் பிழைத்தது. மேகவதியால் தான்! ஆயினும் சமீபத்தில் நடந்த அமைச்சரவை மாற்றங்கள் மேகவதியைக் கலந்து ஆலோசிக்காது நடைபெற்று இருக்கிறது. இது மேகவதிக்குக் கசப்பினைத் தோற்றுவித்து இருக்கிறதாம்.

மலேசியாவின் துணைப்பிரதமர் அப்துல்லா அகமட் பட்வி இந்தோனேசியா



பிரச்சினைகளைச் சிக்கலாக்கும் இந்தோனேசிய இராணுவம்

பிழையான பாதையில் போவதாக எச்சரித்து உள்ளார். அவுஸ்திரேலியாவுக்கும் சிங்கப்பூருக்கும் கூடவே இதே பயம் ஏற்பட்டிருக்கிறது. மலேசியாவுக்கும், பிலிப்பைன்சுக்கும் ஒரு பயம் இருக்கிறது. அதாவது இந்தோனேசியாவின் முஸ்லிம் தீவிரவாதிகள் தமது நாட்டின் தெற்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் தீவுகளை தளமாகப் பயன்படுத்தி விடுவார்களோ என்று! அமெரிக்காவின்



ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட உக்ரேன் பிரஜை

புதிய செயலாளர் இந்தோனேசியா கண்காணிக்கப்பட வேண்டிய நாடு என எச்சரிக்கிறார்.

இந்தோனேசியப் பாராளுமன்றத்தில் இருக்கும் 200 எம்.பீக்கள் வாஹிட் குற்றவாளி என நினைக்கிறார்களாம்! பெப்ரவரி 14ம் திகதியன்று வாஹிட் தான் ஒய்வெடுக்கப் போவதாகக் கூறினார். ஆனால் ஒய்வு




கம்யூனிசம் என்றால் என்ன எனக் கேட்கிறது குழந்தை ஒன்று. நன்றி (**The wored 2001** சஞ்சிகை)

பெற்றதாகவும் தகவல் இல்லை. விரைவில் மக்கா செல்வதற்கு வாஹிட் ஒழுங்கு செய்திருக்கிறாராம்! இவர் மக்கா சென்றால் பின்பு திரும்பி வரப்போவது இல்லையென்றும் ஊகங்கள் அடிபடுகின்றன.

இந்தோனேசியாவில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய ஒழுங்கு முறை இராணுவம் இல்லை. மேகவதி சுகர்ணோ புத்திரி ஜனாதிபதியானாலும் நிலை இதுவாம். மொலுக்காஸ் தீவில் கிறிஸ்தவர்கள் கொலை செய்யப் பட்டமை, கிழக்குத் தீமோர்ப் பிரச்சினை, ஈரியன் ஜயா, ஆச் மாகாணம், போர்ணியோ ஆகிய வற்றில் ஏற்பட்ட சிக்கல்களை இந்தோனேசிய ராணுவம் கையாண்ட விதம் குறித்து சர்வதேச ரீதியில் நல்ல அபிப்பிராயம் இல்லை.


இந்தோனேசியாவில் நாளை என்ன நடக்கப் போகின்றது என்பதே இன்றைய பிரச்சினை!

ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற மாநிலத்தில் ஒன்று உக்ரேன். இதனது ஜனாதிபதி லியோனிட் குச்மா. இவர் ஊழல் மன்னன் என்றும் இவர் தனது பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டும் என ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சில விடயங்கள் நம்புவது கஷ்டம்! ஆனால் நம்ப வேண்டிய தேவை இருக்கின்றது. 2001ஆம் ஆண்டில் சீனாவின் தொழிற்சாலை உற்பத்தியில் 50% தனியார் கம்பனிகளின் உற்பத்தியாகவே இருக்கும். பண்ணை உடமைகள் தனியார் உடமைகளாக மாறிக் கொண்டிருக்கின்றன. அரசுடமையான தொழிற்சாலைகள் நட்டத்தில் இயங்குவதால் தொழிலாளர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள் இவர்களைத் தனியுடமைத் தொழிற்சாலைகள் இணைத்துக் கொள்கின்றன. 5 மில்லியன் மக்கள் தொழில் இன்றி அலைகிறார்கள்.

மா-ஓ-சேதுங்கால் வளர்க்கப்பட்ட சோசலிச யுகம் தடுமாறிக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவம் அரைவாசி இடத்தைப் பிடித்துக் கொண்டு விட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் ஒவ்வொரு நாளும் தெரிவிக்கின்றன.

❖❖❖❖❖❖




# விளையாட்டுக்களில் கிரிக்கெட் பயங்கரவாதம்!

(எம்.பாயிஸ்)

கிரிக்கெட் அனைவரையும் ஆட்கொண்ட ஆளுகின்ற பெயர். பள்ளிக்கூடப் பையன் தொடக்கம் பல்லுப் போன பாட்டன் வரை இதன் ஆட்சிக்குட்பட்டு விட்டனர். பல வீட்டின் இல்லத் தரசிகள் இதன் பரம இரசிகர்களாகவே மாறிவிட்டனர். அந்தளவுக்கு அனைவரையும் ஆளுகின்றது இந்தக் கிரிக்கெட். வயல்கள், வீட்டு முற்றங்கள், ஏன் உள்வீடு, பிரதான பாதைகள் கூட இன்று மைதானமாக மாறுகின்றன.

கிரிக்கெட் போட்டி நடாத்தும் நாட்களில் அலுவலகங்கள் தூங்கி வழிகின்றன. நாடே ஊரடங்கு போட்டது போல் வெறிச்சோடிப் போகின்றது. அந்தத் தினங்களில் எவரும் எதையும் செய்து கொள்ள முடியாத நிலை. பல பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் என்று எல்லாத் துறையையும் குலுக்கி எடுக்கும் அளவுக்கு கிரிக்கெட் மோகம் வெளுத்து வாங்குகின்றது. எனவே, கிரிக்கெட் ஒரு விளையாட்டு என்ற நிலையிலிருந்து பல இலட்சம் மக்களின் பல மணி நேரங்களைக் கொன்று குவிக்கும் பயங்கரவாதமாகவே மாறியுள்ளது. மனித மனங்களில் மகிழ்வை ஊட்டி உடலுக்குத் தெம்பையும், உற்சாகத்தையும் தரும் விளையாட்டுக்களை ஊக்குவிக்கின்றது. எனினும் எதுவும் அளவோடு இருக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பர்.

கிரிக்கெட்டும் அந்நிலைக்குத் தான் மாறியுள்ளது. கிரிக்கெட் போட்டிகள் நடக்கும் நாட்களில் பல இளைஞர்கள் தொலைக்காட்சியின் முன்னால் நட்டு வைத்த சிலையாக நிற்கின்றனர். அவர்களின் முயற்சி, சிந்தனை, துடிப்பு அனைத்தும் அடங்கிப் போகின்றன. இது விளையாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் உடல் ஆரோக்கியத்தையும் உற்சாகத்தையும் தருவதற்குப் பதிலாக சோம்பலையும், உற்சாகமின்மையையும், அயர்வையுமே தரும்.

அரசும், தொலைத் தொடர்பு சாதனங்களும் கிரிக்கெட்டுக்கு அளிக்கும் அட்டகாசமான, ஆர்ப்பாட்டமான விளம்பரங்கள் எமக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. நாட்டில் வேலையில்லாத இளைஞர்களின் தொகை அதிகரித்து வருகிறது. தனக்கு வேலை இல்லையே என்ற சிந்தனை இத்தகைய இளைஞர்களுக்கு எழாமல் இருக்க, அவர்களது ஓய்வு சிரத்தையை கபளிகரம் செய்ய நாட்டு மக்களின் அவதானம் அரசின் அன்றாட நடவடிக்கைகளின் பக்கம் திரும்பாமல் இருக்க என பல்வேறு உள் நோக்கங்கள் கிரிக்கெட்டுக்கு அரசுகள் வழங்கும் அபரிமிதமான முக்கியத்துவத்துக்குக் காரணங்களாக இருக்குமோ என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

கிரிக்கெட் தனிமனிதனில் மட்டுமன்றி சமூகங்களுக்கிடையேயும் பல பல பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. தற்போது ஒவ்வொரு முஸ்லிமின் வீட்டிலும் சிறிலங்கா சப்போட்டர், பாகிஸ்தான் சப்போட்டர் என்ற இரு பிரிவு உண்டாகி விட்டது. எம்மைப் பொறுத்த வரையில் விளையாட்டு என வந்து விட்டால் அதில் எவர் திறமையைக் காட்டினாலும் அதனை மதிக்க வேண்டும் என்ற மன நிலையிலேயே நாம் இருக்கின்றோம்.

எனினும் எமது இளைஞர்களும் மாற்றார் மனம் அறிந்து தூர நோக்கோடு செயற்பட வேண்டும்.

எனவே, கிரிக்கெட் விளையாட்டை அளவோடு ரசிப்பதற்குள்ள அனுமதியை நாம் பயன் படுத்த வேண்டும். எமது ரசனையைத் தவறான முறையில் வெளியிடுவதன் மூலம் சமூகப் பகையை வளர்த்து விடலாகாது. இந்தக் கிரிக்கெட் மோகம் இதே நிலையில் தொடரும் எனின் அது நாட்டு மக்களின் கல்வி, பொருளாதாரம், தொழில்நுட்ப முயற்சி சுயதொழில் என அனைத்துத் துறைகளிலும் பாரிய தொய்வு நிலையை ஏற்படுத்தும் என்பதை அரசு அவதானத்தில் கொள்ள வேண்டும். அத்தோடு இன்று கிரிக்கெட் ரசிகர்களுக்கு மத்தியில் ஏற்படும் சிறு சிறு கை கலப்புக்கள் இதே நிலையில் தொடருமெனில் சில வருடங்களுக்குள்ளேயே இன மோதல்களைக் கூட ஏற்படுத்தலாம் என்பதால் அரசு கிரிக்கெட் விடயத்தில் கடைப்பிடிக்கும் போக்கில் மாற்றத்தைக் கொண்டு வருதல் நன்று.

இந்தக் கிரிக்கெட் பயங்கரவாதத்தின் மாயையில் இருந்து எம் மனைவரையும் பாதுகாத்துக் கொள்வோம்.

## கற்பித்தலுக்கு விளையாட்டும் அவசியமாகும்

(முபா)

-பிரதிக் கல்விப் பணிப்பாளர்-

"கற்பித்தலுக்கு விளையாட்டும் ஒரு முக்கிய முறையாகும். பாலர் கல்விக்கு மகிழ்ச்சிகரமான கற்றல் இருந்தால் தான் கற்றல் சிறப்பானதாக அமையும். விளையாட்டின் ஊடாக நாம் பலதரப்பட்ட விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு கல்முனை கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.ஆனந்தராஜா சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இடம் பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றிய போது குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை சாய்ந்தமருது மொண்டேசர் அமைப்பின் பணிப்பாளர் றகுமத்துல் ஹுசன் தலைமையில் இப்போட்டி இடம் பெற்றது. இப்போட்டியில் டிப்ளோமா பயிற்சி ஆசிரியர் குழுவினர் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

**போட்டி முடிவுகள்:-**

1. டிப்ளோமா ஆசிரியர் குழு- 50 புள்ளிகள்
2. முதலாம் வருட ஆசிரியர் குழு- 35 புள்ளிகள்

பரிசளிப்பு வைபவத்தில் கல்விக் கல்லூரி விரிவுரையாளர் எம்.ஐ.எம். முஸ்தபா, எம்.பஜுர்தீன், ஏ.பி.சம்சுனா ஆகியோர் உரையாற்றினர்.




நேற்று முன்தினம் பம்பாயில் தொடங்கிய முதலாவது டெஸ்ட் போட்டியின் தொடக்கத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியினர் மறைந்த முன்னாள் கிரிக்கெட் வீரரும், உலகின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரரும், பல கிரிக்கெட் உலக சாதனைகளை தம்மகத்தே கொண்டுள்ளவரான சேர்.டொன்.பிரட்மனின் நினைவாக சில நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்துவதை படத்தில் காணலாம். கடந்த ஞாயிறன்று டொன் பிரட்மன் தனது 92 வது வயதில் தனது வீட்டில் காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அல்ஹம்றா இல்ல விளையாட்டுப் போட்டி

(நழீம் எம்.பதுர்தீன்)

கமு/மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி எதிர் வரும் பெப்ரவரி 28, மார்ச் 01,02 ஆகிய திகதிகளில் மருதமுனை மஷூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அதிபர் எஸ்.எம்.எஸ். எச்.பாரி மௌலானா தலைமையில் நடைபெறவுள்ளது.

ஹம்றா, ஹுழ்றா, சப்றா ஆகிய மூன்று இல்லங்களுக்கிடையே நடைபெறப்போகும் இவ் இல்ல விளையாட்டுப் போட்டியில் பெப்ரவரி 28ம் திகதி, சிறுவர் விளையாட்டு விழாவும், மார்ச் 01,02 ஆகிய தினங்களில் வளர்ந்த மாணவர்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளது.




## கிட்டங்கிப் பாலத்தை சீர் செய்ய வேண்டாமா?

கல்முனை கிட்டங்கித்துறைப் பாலம் நீண்ட காலமாக புனரமைப்பு வேலைகள் எதுவும் செய்யப்படாததனால் முற்றாக இடிந்து விழக்கூடிய அபாயத்தை எதிர் நோக்கியிருக்கின்றது.

அம்பாறை- மட்டக்களப்பு மாவட்ட எல்லையில் அமைந்திருக்கின்ற இப் பாலம் நீண்ட காலமாக கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. இனிமேலாவது புனர் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படாவிடத்து இப்பாலம் முற்றாக சேதமடைந்து விடலாம்.

இம் மாவட்டங்களில் காலத்துக்குக் காலம் பலர் அமைச்சர்களாகப் பதவி வகித்தும் கூட இப்பாலம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இப் பாலம் உடைந்து போக்குவரத்து செய்ய முடியாத நிலை தோன்றியிருப்பதால் விவசாய அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட பல குடியேற்றக் கிராமங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பது மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, இது விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு புனரமைப்பு வேலைகளை உடனடியாக மேற்கொள்வதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எஸ்.மௌலானா
சாய்ந்தமருது

## பிரதேச செயலாளர் அவர்களுக்கு!

ஐயா, மேற்படி எங்கள் கிராமத்தில் 1948ம் ஆண்டு ஏறாவூர்ப் பற்று பிரதேச சபைக்கான காரியாலயம் வந்தாறுமூலையில் அமைக்கப்பட்டது. கடந்த 1994ம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றதன் பின்பு பாதுகாப்பைக் காரணம் காட்டி தற்காலிகமாக செங்கலடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. ஆனால் 1500 ரூபா வாடகைப் பணம் கொடுத்தும் வீணாக செலவு செய்யப்படும் இவ்வேளையில் சொந்தக் கட்டிடம் பழுதடைந்து செல்கின்றது.

இது தொடர்பாக நாங்கள் பலமுறை அறிவித்தும் இடமாற்றம் செய்யப்படவில்லை. பொதுக்கூட்டம் கூட்டப்படும் போது மக்களின் கேள்விக்கு பதில் அளிக்க முடியாமல் உள்ளது. எனவே, தங்களின் மேலான கவனத்தில் கொண்டு இடமாற்றம் செய்வதுடன் தங்களின் பதிலைப் பொறுத்தே பொது மக்களின் மேலான நடவடிக்கையை தடுக்க முடியும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு பணிவாக அறியத் தருகின்றோம்.

தலைவர்:- ந.சம்புநாதன்
செயலாளர்:- ச.நல்லரெத்தினம்
கிராம அபிவிருத்தச் சங்கம்
வந்தாறுமூலை

## ஏறாவூர் பற்றுக்கு இளைஞர் சேவை அதிகாரி யார்?

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கீழ் இயங்கும் இளைஞர் சேவை அதிகாரிகள் ஒவ்வொரு பிரதேச மட்டத்திற்கும் ஒருவர் என்ற அடிப்படையில் தமது கடமைகளை செய்துவருகின்ற இவ்வேளையில் ஏறா வூர் பற்றுப் பிரதேசம் சிறந்த இளைஞர்களை உருவாக்கிய பிரதேசம் இந்தப் பிரதேசத்திற்கும் கடந்த இருமாதங்களாக இளைஞர் சேவை அதிகாரிகள் யார் என்று தெரியாமல் செயல்பட்டு வருகின்றது. அத்துடன் 1999ம் ஆண்டு நடத்தப்பட்ட சிங்கள மொழிப் பயிற்சிக்கான சான்றிதழ்களும் மாவட்ட காரியாலயத்திலேயே தேங்கிக் கிடக்கின்றது. இதுபோன்றே விளையாட்டு கலாசார மற்றும் சான்றிதழ்களும் தேங்கிக் கிடக்கின்றன. சர்வ சக்தியுள்ள இளைஞர்களை உருவாக்க வேண்டியவர்கள் இளைஞர்களின் வளர்ச்சியில் எதுவித அக்கறையும் இல்லாதவாறே நடந்து கொள்கிறார்கள். இந்நிலை மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்று பிரதேசத்திற்கு மாத்திரம் நடைபெறுகின்றதா? எங்கள் பிரதேசம் மாவட்ட சம்மேளனத் தலைவர் உட்பட அகில இலங்கை சம்மேளன உபதலைவர் பதவி வகிக்கின்ற ஒரு பிரதேசம். இப்படியான திறமைக்கு இளைஞர்களை உருவாக்கிய இப்பிரதேசத்தில் சென்ற வருடம் சிறந்த இளைஞர் கழகத் தெரிவில் ஏறாவூர் பற்று பிரதேசம் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியான ஒரு புறக்கணிப்பு எங்கள் மனதை புண்படுத்துகின்றது.

ஆகவே சம்மேளனத் தலைவர் உட்பட சகல அதிகாரிகளும் கவனத்தில் கொண்டு சகல குறைபாடுகளையும் நீக்குவதோடு உடனடியாக அனைவரும் அறியக்கூடிய வகையில் ஒரு இளைஞர் சேவை அதிகாரியை எங்கள் பிரதேசத்திற்கு நியமிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

தெ.ரெகுநாதன்
சக்தி இளைஞர் கழகம்
வந்தாறுமூலை (மேற்கு)

# கொழும்பில் தமிழ் கட்சித் தலைவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்!

(நமது நிருபர்)

**எனக்கும் என்னைப் போன்ற தமிழ் தலைவர்களுக்கும் கொழும்பில் சிங்களப் பேரினவாதிகளினால் கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.**

## யாழ். மேயர்

எனினும் நாங்கள் எமது மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் தயங்கமாட்டோம் என நேற்று காலை நடைபெற்ற யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மாநகரசபையின் மேயரும் சட்டத்தரணியுமான என். ரவிராஜ் தெரிவித்தார்.

பிரிட்டன் புலிகளைத் தடை செய்யக் கூடாது என நாங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் குரல் கொடுத்து வருகின்றோம். இதனால் தொலைபேசி மூலமும் கடிதமூலமும் எமக்கு கொலை அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் நாங்கள் எமது மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்வதுடன் தொடர்ந்து குரல் கொடுத்து வருவோம்" என்றார்.

# தமது வீடுகளைப் பார்க்கச் செல்பவர்களிடம் படையினர் இலஞ்சம் பெறுகின்றனர்

(நமது நிருபர்)

யாழ். தென்மராட்சிப் பகுதியில் குறிப்பாக சாவகச்சேரி பிரதேசத்தில் போரினால் இடிந்து விழுந்துபோயுள்ள தமது வீடுகளைப் பார்வையிடுவதற்குப் பொது மக்கள் செல்வதாயின் அங்குள்ள சிறிலங்கா படையினருக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளதாக யாழ். மேயர் என்.ரவிராஜ் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் குண்டுத் தாக்குதலினால் பல வீடுகள் இடிந்து தரைட்டமாகியுள்ளன. சில வீடுகளில் கூரைக் கம்புகளும் சிதைந்த தகரங்களுமே உள்ளன. இவற்றை எடுத்து வருவதற்கும் தமது வீடுகளைச் சென்று பார்வையிடுவதற்கும் இப்பகுதியிலுள்ள சிறிலங்கா படையினருக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் இவ்வாறு கொடுக்கத் தவறுபவர்களுக்கு இப்பகுதிக்குச் செல்வதற்கான அனுமதி மறுக்கப்படுவதாகவும் இப்பகுதி பொதுமக்கள் தன்னிடம் முறையிட்டுளளதாக மேயர் ரவிராஜ் மேலும் தெரிவித்தார். தென்மராட்சிப் பகுதி சிறிலங்கா படையின் 52-2 ஆவது பிரிக்கேட்டின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இங்குள்ள சாவகச்சேரி, கைதடி, நாவற்குழி, நுணாவில், மட்டுவில், சங்கத்தானை, சரசாலை, மீசாலை, கொடிகாமம், மந்துவில் உட்பட பல கிராமங்கள் குண்டுத் தாக்குதலினால் சேதமடைந்துள்ளன. இதில் சாவகச்சேரி நகரமும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. சாவகச்சேரிக்குச் சென்று தமது வீடுகளைப் பார்வையிடுபவர்கள் கொடிகாமத்திலுள்ள படைமுகாமில் விண்ணப்பித்து அனுமதியைப் பெற்றே செல்ல வேண்டும்.

# யாழ். குடாநாட்டை சீரழிக்கும் ஆபாசப் படங்கள்

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டுக்குள் ஆபாசப் படங்கள் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் நறுக்குகள் என்பன தாராளமாகக் கிடைப்பதனால் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் இதனால் கவரப்பட்டு தவறான வழிக்கு இட்டுச் செல்வதுடன் கலாசாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக யாழ். மாநகர மேயர் என். ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டுக்குள் ஆபாசப் படங்கள் மற்றும் அது தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படுவதுடன் இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் இதைச் சர்வசாதாரணமாகக் கொண்டு திரிவதால் கலாசாரச் சீர்கேடு ஏற்படுவதுடன் இதைத் தடை செய்ய வேண்டுமென யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ். மங்களநேசன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) திங்கட் கிழமை நடைபெற்ற மாநகரசபையின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார். இக்கருத்துத் தொடர்பாக இன்று நடைபெற்ற மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்திலும் ஆராயப்பட்டது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மேயர் ரவிராஜ் தொடர்ந்து கூறுகையில்: யாழ்ப்பாணம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோது இவ்வாறான கலாசாரச் சீர்கேடுகள் இடம் பெறவில்லை. ஆபாசப் படங்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அது மிகவேகமாகப் பரவி வருகின்றது. பாடசாலை மாணவர்களிடமும், இளைஞர்களிடமும் இந்த ஆபாசப் படங்கள், மற்றும் அது தொடர்பான பிரசுரங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. இது தொடருமானால் குடாநாட்டில் கலாசாரப் பிரச்சினைகள் மற்றும் பாலியல் தொடர்பான பிரச்சினைகள் தலை தூக்கும் நிலை ஏற்படும்.

இந்தப் படங்கள் மற்றும் பிரசுரங்கள் அதிகம் சிங்கள மொழியில் காணப்படுகின்றன ஆனால் இது யாரால் குடாநாட்டுக்குள் கொண்டு வரப்படுகின்றது எவ்வாறு கொண்டுவரப்படுகின்றது என்ற தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் இது தென்பகுதியிலிருந்தே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்

# பொங்கு.........

கலந்து கொண்டனர்.

கடந்த மாதம் 20ம் திகதி நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்வு, பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்களைக் கொண்டு விடுதலைப் புலிகளாலேயே ஒழுங்குபடுத்தப்பட்டது என, 2ம் திகதி அதிபர்கள், பத்திரிகையாளர்களை அழைத்து நடாத்திய கூட்டமொன்றில் கேணல் அன்ரனீஸ் தெரிவித்திருந்தார்.

இக் கருத்தை கண்டித்தே நேற்று பல்கலைக்கழகத்தில் இந்த போராட்டம் நடைபெற்றது.

'பூசாதே பூசாதே புலிச்சாயம் பூசாதே' 'சமாதானக் குரலை நசுக்காதே' 'நாங்கள் மாணவர்கள் நாம் புலிகளல்ல' 'சமாதான முயற்சியில் ஈடுபடுவோரையும் புலிகள் என்பாயா?' போன்ற கோஷங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது எழுப்பப்பட்டன.

### இராணுவம் வந்தது

மதியம் 12.30 மணியளவில் மாணவர்கள் மைதானத்தில் வந்து கூடியதும் திடீரென அவ்விடத்துக்கு வாகனத்தில் வந்திறங்கிய இராணுவத்தினர் மாணவர்களைப் படம் எடுக்க முனைந்த போது மாணவர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இராணுவத்தினர் தாம் பத்திரிகையாளர்கள் எனத் தெரிவித்த போதும், மாணவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாது எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து இராணுவத்தினர் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் 'நாம் எமது மக்களின் மனங்களுள் புதைந்துள்ள அபிலாஷைகளை வெளிப்படுத்தவே 'பொங்குதமிழ்' நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தோம் போரை நிறுத்தி சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதே தமிழ் மக்கள் அனைவரினதும் விருப்பமாகும். ஆனால். இச்சமாதானக் குரலை வெளிப்படுத்திய எம்மீது புலிச்சாயம் பூசுவதன்மூலம், இராணுவத்தினர் எமது சமாதானக் குரலை நசுக்க முற்படுகின்றனர்' என்றார்.

'மாவட்ட இணைப்பதிகாரி தான் வெளியிட்ட கருத்தை வாபஸ் பெறவேண்டும்' எனவும் மாணவர்கள் கருத்து வெளியிட்டனர்.

# பிரிட்டன் ....

அமைப்புக்களின் செயற்பாடுகள் பற்றியும் பரிசீலிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இந்த அமைப்புக்களில் உள்ள உறுப்பினர் ஒருவர் செயற்படுவது நிதி சேகரிப்பது. ஆதரவு வழங்குவது. கூட்டங்களில் பேசுவது என்பன சட்ட விரோதமாக்கப்படுகிறது. அத்துடன் பிரிட்டனில் இருந்து கொண்டு வேறு நாடுகளில் பயங்கரவாத நடவடிக்கைகளில் செயற்படுவது போன்றவையும் சட்ட விரோதமாக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் மேற்படி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை கைது செய்யவும் விசாரணை நடத்தவும் பொலிஸாருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## அமரர் வ.அ.இ மறைவுக்கு நினைவு நிகழ்வு

(நமது நிருபர்)

தமிழ் ஒளி அமரர் வ.அ. இராசரெத்தினம் அவர்களின் மறைவையொட்டி மட்டக்களப்பு வாசகர் வட்டம் நினைவு நிகழ்வு ஒன்றினை நடாத்தவுள்ளது.

மார்ச் 4ம் திகதி ஞாயிறு காலை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் காலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

பிரபல எழுத்தாளர் எஸ்.எல்.எம். கனிபா, முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.யோகராசா, கவிஞர்கள் மட்டுநகர் முத்தழகு, வாசுதேவன், ஆகியோர் உட்பட பலர் நிகழ்வுகளை நடத்துகின்றனர்.

## கல்முனையில் மீண்டும் கண்சிகிச்சை.

(நமது நிருபர்)

கல்முனை ஆதார வைத்திய சாலையில் கடந்த பத்து வருடங்களாக நடைபெறாதிருந்த கண் கிளினிக் கடந்த 19ம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் க.தவராசா தலைமையில் நடைபெற்றது இச்சிகிச்சை வழங்கலில் டாக்டர் நிமலன் மற்று தாதியர்களும் கலந்து கொண்டனர்.

சுமார் நூறு பேருக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# தடுத்து வைக்கப்பட்டிருப்போர் உறவினர்களுக்கு கடிதங்களை அனுப்பினர்

(யாழ் நிருபர்)

யாழ் தென்மராட்சியில் இருந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏழு பேர் நேற்று மனித உரிமை ஆணைக்குழு மூலம் உறவினர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரி எஸ். ஜீவேஸ்வர ராஜா சென்று பார்வையிட்ட போதே இவர்கள் கடிதங்களை கையளித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கைது செய்யப்பட்ட பின்பு பலாலி படை முகாமில் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்பு காங்கேசன் துறை தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

**வாசகர்களே!**

நேற்றைய தினக்கதிரில் 3ம் பக்கம் வெளியான தடாகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் முந்திரிகை, பதனிடும் தொழிற்சாலை எனும் செய்தியில் கிறிஸ்த்தவ உதவி நிறுவனம் (C.A) என்பதற்குப்பதிலாக C.A.A நிறுவனம் என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுவிட்டது என்பதை வாசகர்களுக்குஅறியத் தருகிறோம்.

# பிரித்தானியா........

இன்றைய நாள் ஒரு சோக நாள் ஆங்கிலேயர் தமிழர் உறவில் நிகழ்ந்த துக்கநாள் விடுதலைப்புலிகளின் உத்தேச தடைக்கு எதிராக ஒன்று திரண்டு எழுந்து ஒருமித்த குரல் எழுப்பிவந்த தமிழீழ மக்கள் பிரித்தானியா அரசின் முடிவினால் ஆழ்ந்த கவலையும் ஏமாற்றமும் அடைவர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான தடை தமிழரின் நலன்களுக்கு பெரும் குந்தகமாக அமையும் சமாதான முயற்சிகளையும் பெரிதாகப் பாதிக்கும் பிரித்தானியா அரசின் இந்த முடிவு சிங்கள இனவாத அரசின் விட்டுக்கொடாத கடும் போக்கை மேலும் தீவிரப் படுத்தும் இராணுவப் பாதையில் சென்ற போரையும் வன்முறையையும் அரச பயங்கரவாதத்தையும் முன்னெடுத்து அதன் கொள்கைக்கும் ஊக்கமளிப்பதாக அமையும். என்று திரு பாலசிங்கம் குறிப்பிட்டார். என வெளிநாட்டு செய்தி ஊடகம் தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதியை ஆயர்கள் சந்திக்கவில்லை

(நமது நிருபர்)

வன்னி சென்று திரும்பிய ஆயர்கள் குழு நேற்று ஜனாதிபதியை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் சந்திப்பு இடம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி செயலகம் இதற்கான அனுமதியை வழங்காது வேறு ஒரு தினத்தில் இந்த சந்திப்பினை நடத்துமாறு ஆயர்களிடம் தெரிவித்திருந்தனர்.

இதனால் கொழும்பு சென்ற ஆயர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# வாகரைக்கு ......................

உணவுப் பொருட்கள்கொண்டு சென்ற போது மாங்கேணி இராணுவ முகாம் சோதனைச் சாவடியில் வைத்து அவற்றினை கொண்டு செல்வதற்கு படையினர் அனுமதி மறுத்ததுடன் அப்பொருட்களை நிலத்தில்கொட்டி விட்டதாகவும், பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாடு மற்றும் பத்திரிகையில் வெளியான செய்தி தொடர்பாக வாழைச்சேனை இராணுவமுகாம் பொறுப்பதிகாரி மேஜர் செனிவரெத்தினாவுடன் தொடர்பு கொண்ட போது,

இவ்வாறான ஒரு சம்பவம் நிகழவில்லை என தெரிவித்த படையதிகாரி மாங்கேணி முகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு பயணிகள் அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குமாறும் கேட்டுக் கொண்டாராம்.

இதே வேளை வாகரைப் பிரதேசத்திற்கு கடந்த செவ்வாய் கிழமை பத்தாயிரம் கிலோ அரிசி 47 - 3043 இலக்கமுடைய லொறியில் அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அடுத்தவாரம் சீனி, பருப்பு போன்றவற்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் படையதிகாரி தெரிவித்ததாகவும் செல்வராசா எம்.பி தெரிவித்தார்.

இப்பத்திரிகை வேல்ட் வொயிஸ் பப்ளிகேஷன் நிறுவனத்தினால் ஈஸ்ரன் கிராபிக்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.